بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# தப்லீக்
# சன்மார்க்க அழைப்பு.

576
3-53

★

ஆக்கியோன்:
பெரியகுளம்,
மௌலவி B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி.

நூறுல்ஹக் பிரஸ்.
மதுரை.

[1-0-0

"இன்னும், 'இறைவா! எனக்கு அறிவு பெருகச் செய்தருள்' என வேண்டுக" (குர்ஆன் 20:114)

## தப்லீக்

# சன்மார்க்க அழைப்பு.

ஆக்கியோன்:
பெரியகுளம்
மௌலவீ B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி.

★

ரை]　　நூருல்ஹக் பிரஸ்.　　[1954

# முன்னுரை.

نَحْمَدُهُ وَنُصَلِّيْ عَلَى رَسُوْلِهِ الْكَرِيْمِ.

அல்லாஹ்வின் சிந்தனையற்றுக்கிடக்கும் மானிடகோடிகளை அல்லாஹ்வுடன் தொடர்புகொள்ளச் செய்வதும், முற்றிலும் ஆத்மஞானமற்ற துன்மார்க்கத்தில் துவண்டுகிடப்போரைச் சன்மார்க்கத்தின்பால் கொணர்ந்து சேர்ப்பதும் நபிமார்களின் திருப்பணியாகும். பொறுப்பு மிக்க இத்தெய்வத் திருப்பணியை நபித்துவ முடிவிற்குப்பின் முஹம்மதுஸல் அவர்களது உம்மத்தினர்களாகிய நம் வசம் ஒப்படைக்கப்பட்டது. கலிமா ஓதிய ஒவ்வொருவரும் இப்பரம கைங்கரியத்தைச் செய்யக் கடமைப்பட்டவர்களாவர்.

وَمَنْ اَحْسَنُ قَوْلًا مِّمَّنْ دَعَى اِلَى اللهِ وَعَمِلَ صَالِحًا

وَقَالَ اِنَّنِيْ مِنَ الْمُسْلِمِيْنَ

எவன் அல்லாஹ்வின்பால் (மானிடர்களை) அழைத்து நற்கருமங்களைச்செய்து முற்றிலும் வழிபடுவோர்க(ளான முஸ்லிம்க)ளில் நானும் ஒருவன் என்று கூறுகின்றானே அவனைவிட அழகான வார்த்தை கூறுபவன் யார்? (குர்ஆன்.)

இதையனுசரித்து நபி பெருமானார் ஸல் அவர்களது காலத்திலே, இஸ்லாத்தைத் தழுவும் ஒவ்வொருவரும் நாம் ஏற்றுக்கொண்ட சத்தியத்தைப் பிறருக்கும் எடுத்தோதி ஏற்கச் செய்வது நமது கடமை என உணர்ந்திருந்தார்கள். நபிகள் நாதர் ஸல் அவர்களும் 'நம்மிடத்திலிருந்து ஒரு விஷயத்தைக் கேட்டு தான் கேட்டதுபோலவே அதனைப் பகிரங்கஞ் செய்த ஒரு மனிதன் மீது அல்லாஹ் பிரீதிகொள்வானாக' என்று பிரார்த்தித்தார்கள். அப்புனித புருஷர்கள் அல்லாஹ் றசூலின் பிரீதியின் பொருட்டும் இஸ்லாம் பரவும்பொருட்டுப்

தமது நாட்டையும் வீட்டையும் துறந்து முற்றிலும் வசதியில்லாத அக்காலத்திலே பன்னூற்றுக்கணக்கான மைல்கள் சென்றார்கள். ஜாவா, சுமத்ரா, சீனா போன்ற தூரதேச நாடுகளிலெல்லாம் சிதறுண்டு நின்றார்கள். ஸஹாபா பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் பொறிக்கப்பட்டுள்ள இஸ்திஆப், அஸதுல்காய அஸாபா போன்ற கிரந்தங்களில், இந்த ஸஹாபி எங்கு பிறந்தார்? இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் எங்கே வாழ்ந்தார்? இவரின் பிரதான தொழில் என்ன? எங்கே நல்லடக்கஞ் செய்யப்பட்டார்? என்பதை மாத்திரம் நாம் ஆராய்வோமானால் இவர் இங்கு பிறந்தார். இஸ்லாம் பரவும்பொருட்டு வெளிநாடுசென்று வாழ்ந்தார். சன்மார்க்க வளர்ச்சிக்காக பாடுபடுவதையே தனது பிரதான தொழிலாகக்கொண்டு அதே முயற்சியில் இன்ன போரில் ஷஹீதானார். அல்லது இன்ன இடத்தில் உயிர் நீத்தார். அவர் சமாதி அங்கே எழுப்பப்பட்டுள்ளது என்ற குறிப்புக்களையே நாம் காணமுடியும். எனவேதான் அவர்களனைவரும் வழிகாட்டும் ஒளி விளக்குகளாகவும், ஜ்வலிக்கும் நட்சத்திரங்களாகவும் அமைய முடிந்தது.

أَصْحَابِي كَالنُّجُومِ بِأَيِّهِمُ اقْتَدَيْتُمُ اهْتَدَيْتُمْ

"எனது தோழர்கள் நட்சத்திரங்களே போன்றவர்கள். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழி அடைந்துவிடுவீர்கள்" (ஹதீது) என நபிகள் திலகம் ஸல் அவர்களே புளகாங்கிதமடைந்து கூறுமளவுக்கு அவர்கள் உயர்பதவி எய்தினார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து தப்லீகுதான் அவர்களின் உயிர்நாடியாயிருந்தது. என்றிலிருந்து இப்பழக்கம் கைவிடப்பட்டதோ அன்றிலிருந்து நமது சமூகமனைத்தும் ஒருஜீவனில்லாத சரீரமாகவே சமைந்துவிட்டது. பகிரங்க மார்க்கப் புறக்கணிப்பை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்! எனவே, உலகாயத இயக்கங்களின் இப் புயல் வேக பருவகாலத்திலே நாமும் நமது சந்ததியினரும் இஸ்லாத்திலே நிலைத்துநிற்பதாயின் தப்லீகுஎன்னும் சன்மார்க்க அழைப்பை முஸ்லிம்களிடையே கூட்டுமுறைப்படியுள்ள

ஒரு பொதுவான இயக்கமாக்கிவிடல்வேண்டும். ஒவ்வொரு நபரையும் சன்மார்க்க அழைப்பாளராய் சமைப்பதற்கான முயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும்.

தப்லீக், முஸ்லிம்களை தனது கொடியின்கீழ் வந்துவிட வேண்டுமென்றோ அல்லது தனது சபையில் சந்தாதாராகச் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றோ அழைக்கவில்லை. அதற்கு எந்தக் கொடியும் சின்னமும் ஸ்தாபனமும் கிடையாது. அது முஸ்லிம்களிடத்தில் விடும் அழைப்பாவது:- முஸ்லிம் பெருமக்களே!

மெய்யான ஈமானைத் தமக்குள் தோற்றுவித்துக்கொள்ளுங்கள். தமது வாழ்க்கையை இஸ்லாமியமயமாகச் சமையுங்கள். மற்றவரிடத்தும் இதற்காக முயற்சிசெய்யுங்கள். இப்புனிதப் பாதையில் கஷ்ட நஷ்டங்களைச் சகிக்கும் தியாகங்கள் செய்யும் நபிமார்களின் வழக்கத்திற்கு மீண்டும் புத்துயிரூட்டுங்கள். வல்லமை மிக்க அல்லாஹ் இவ்வித வாழ்க்கையினால் தான் சந்தோஷமுறுகிறான். இவ்வித வாழ்க்கையை அனுஷ்டிப்போருக்கே அல்லாஹ் தனது நிரந்தர அருளையும் இம்மை மறுமையின் வெற்றியையும் சிறப்பையும் வாக்களித்துள்ளான்.

இவ்விரிந்த கருத்துக்களை இந்நூல் ஆதாரபூர்வமாக நிரூபிக்கிறது. மௌலானா இல்யாஸ் றஹ் அவர்களது மேற்பார்வையின் கீழ் மௌலானா ஸய்யித் அபுல் ஹஸன் அலி நத்வீ அவர்கள் எழுதி வெளியிட்ட 'ஏக் அஹம் தீனி தஃவத்' என்ற நூலின் தமிழாக்கமும், இன்னும் பல விஷயங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் வெளியிட ஆர்வமூட்டிய அன்பர்களுக்கும், இதனைச் சிறந்தமுறையில் பதிப்பித்துத் தந்த நூறுல்ஹக் அச்சகத்தாருக்கும் எமது ஆழிய நன்றி!

வல்ல நாயன் நம்மனைவருக்கும் தப்லீகில் பன்னெடுங் காலம் பங்கெடுத்து பல தியாகங்கள்புரியும் பாக்கியத்தைத் தந்தருள்வானாக! ஆமீன்.

தங்களன்புள்ள,

(மௌலவீ) B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி,

பெரியகுளம்.

# தப்லீக் அழைப்பு.

மௌலானா முஹம்மது இல்யாஸ்ரஹ் அவர்கள் அருளியதாவது:-

"நமது நபி பெருமானார் ஸல் அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலே தேட்டமில்லாத ஜனங்களின் இல்லங்களுக்குத் தேடிச்சென்று, அவர்களின் சபைகளுக்கு அழைப்பில்லாமல் தாமேசென்று அழைப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தமக்கு அழைப்பு வேண்டும் என்று எதிர்பார்த்தார்களில்லை. சிற்சில இடங்களுக்கு ஸஹாபா பெருமக்களை 'தப்லீகிற்காக இன்னின்ன இடங்களுக்குச் செல்லுங்கள்' என நபி பெருமானாரவர்களே அனுப்பிவைத்துள்ளார்கள். தற்காலத்திலும் அதே தாழ்வு நிலை இருக்கிறது. ஆதலின் நாமும் இன்று தேட்டமில்லாத ஜனங்களிடத்தைத் தேடிச்செல்லவேண்டும். நாஸ்திகர்கள், பாவிகள் சபைகளிலே சென்று சத்திய மூலப்பிரமாணம் முழங்கச் செய்யவேண்டும்.

நமது (தப்லீக்) வேலை தீனின் அஸ்திவாரமான வேலையாகும். நமது இயக்கம் மெய்யாகவே ஈமானின் இயக்கமாகும். தற்காலத்திலே கூட்டுமுறைப்படி சன்மார்க்கப் பணிபுரிபவர்கள் 'ஈமானின் அஸ்திவாரம் நிலைத்துநிற்கிறது' எனப் பொதுப்படையாக யூகித்துக்கொண்டு, சமூகத்தின் மேல்கட்டிடத்தை எழுப்புகின்றனர்; மேல்மாடியின் அவசியங்களின் பால் அக்கறைசெலுத்துகின்றனர். ஆனால், உம்மத்தினரின் உள்ளங்களிலே முதன்மையாக மெய்யான

ஈமானின் ஜோதி புகுந்துவிட வேண்டும் என்பதையே சமூகத்திற்கு வேண்டிய முதல் தேவை என்று நாம் கருதுகிறோம்.

தீனின் மகத்துவமும் தேட்டமும் உம்மத்தினரின் உள்ளங்களிலே இல்லாதொழிந்திருப்பதுவே தற்போது நம் சமூகத்தினரைப் பிடித்தாட்டும் மெய்யான நோய். தீனின் அக்கறையும், தேட்டமும் அவர்களுள் பிறந்துவிடுமேயானல், தீனின் முக்கியத்துவத்தைப் பற்றிய உணர்வு அவர்களுள் புத்துயிர் பெற்றுவிடுமேயானல் சிறுகச் சிறுக அவர்களின் இஸ்லாமியத்துவம் தழைத்துச் செழித்துவிடும். தற்போது தீனின் தேட்டத்தையும் மகத்துவத்தையும் உற்பத்திசெய்ய முயற்சிக்க வேண்டுமென்பதுவே நமது இந்த இயக்கத்தின் அஸல் நோக்கமேயன்றி வெறும் கலிமா, தொழுகை போன்றவைகளின் சீர்திருத்த போதனை மாத்திரம் அன்று.

நமது இந்த இயக்கத்தின் முக்கியமான நோக்கம், முஸ்லிம்கள் தங்களது சர்வ உணர்ச்சியையுங் காட்டினும் தீனின் உணர்ச்சியை மேலோங்கச் செய்து இவ்வழியின் வாயிலாக ஒற்றுமையை உற்பத்தி செய்து முஸ்லிம்களுக்கு கவுரவமளித்தல் (இக்ராமே முஸ்லிம்) என்ற திட்டத்தை நடைமுறையில் கொணர்ந்து சமூக மக்களனைவரையும்

اَلْمُسْلِمُوْنَ كَجَسَدٍ وَاحِدٍ۔

'முஸ்லிம்களனைவரும் ஒரே சரீரத்தைப்போன்றவர்கள்' என்ற ஹதீதிற்கு எடுத்துக்காட்டாகச் சமைப்பதாகும்!

தீனின் பற்றுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தன்னைவிட அதிகம் அறிந்தவர்களிடம் தீனைப்பயின்று அதனை அறியாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டுமென்பதுவே நமது தப்லீகின் கருத்தாகும். ஆனால் கிழோர்களைத் தங்களின் உபகாரிகளாகக் கருத வேண்டும். ஏனெனில், கலிமாவை நாம் எந்த அளவு எடுத்தோதிப் பரத்துகின்றோமோ அவ்வளவு நமது கலிமாவும் பரிபூரணத்துவம் வாய்ந்ததாயும், ஜோதி நிறைந்ததாயும் சமையும். எத்தனை நபர்களைத் தொழுகையாளியாகச் சமைக்கின்றோமோ அத்தனை சம்பூரணத்துவம் நமது தொழுகையும் அடைகின்றது.

அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் எந்த விஷயத்தால் சந்தோஷமும் திருப்தியும் ஏற்படுமோ அதனால் அடியானும் சந்தோஷமும் திருப்தியும் அடையவேண்டும. எந்த விஷயத்தால் அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படுமோ அதனால் அடியானுக்கும் வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படவேண்டும். இதற்குப் பெயர்தான் ஈமான். வாளினால் எவ்விதம் சிரமம் ஏற்படுகிறதோ அதே போன்று ஊசியினாலும் சிரமம் ஏற்படுகிறது. எனவே அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் குப்ரினாலும் ஷிர்க்கினாலும் வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படுகின்றன; பாவத்தினாலும் ஏற்படுகின்றன. ஆகவே பாவத்தினால் நமக்கும் வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படவேண்டும்.

# என் உள்ளத்தைக் கவர்ந்த தப்லீக்.

அல்லாமா மௌலானா ஸய்யித் சுலைமான் நத்வீ அவர்கள் கூறுவதாவது:- 1943 ஜூலை 11-ந்தேதி மத்தியானத்தில் "தானபோன்" ரயில்வேஸ்டேஷனில் நல்ல சந்தர்ப்பமாக **ஹஜ்ரத் மௌலானா இல்யாஸ் ஸாஹிப் காந்தலவீ** ரஹ் அவர்களுடன் சந்திப்பு ஏற்பட்டது. அவர்கள் பஸ்தி நிஜாமுத்தீன் டில்லியிலே தப்லீக் சன்மார்க்க அழைப்பின் பணியைப் பதினைந்து ஆண்டுகளாகப் புரிந்துவருகிறார்கள். அவர்களின் உணர்ச்சி, ஓயாத உழைப்பின் பொருட்டால் 30, 40 இலட்சம் நவ்முஸ்லிம்கள் வசித்துவரும் மேவாத் பகுதியில் பெரும் மாறுதல் பிறந்திருக்கிறது. மதிப்பிற்குரிய ஹஜ்ரத் மௌலானா அவர்களின் பெயரையும் பணியையும் பற்றி முன்னேயே தெரிந்திருந்தேன். நமது **மதரஸா தாருல் உலூம் நத்வத்துல் உலமா**விலுள்ள சில ஆசிரியப் பெரியார்களும் மாணவர்களும் அடிக்கடி மௌலானா அவர்களது சமுகத்தில் சென்று அவர்களின் (ஸுஹ்பத்) பேருறவால் பயனடைந்து அவர்கள் புரிந்துவரும் தப்லீகுத் தொண்டிலும் பங்கெடுத்து வந்துள்ளார்கள். ஆனால் உங்கள் ஊழியனான எனக்கு இதுவரை நேரில் சந்திக்கும் பாக்கியமோ அவர்களின் பணியின் உண்மை நிலையையும் வகையையும் பற்றி அறியும் சந்தர்ப்பமோ வாய்க்காமலிருந்தது. சிறிது நேரம் ஸ்டேஷனிலும் தானபோனிலிருந்து காந்தலா வரை ரயிலிலுமாக ஒரிருமணி நேரம் அவர்களுடன் இருந்து அவர்களது அழைப்பின் நோக்கத்தையும்

முறையையும் பற்றிக் கேட்டு விளங்கிக் கொண்டே இருந்தேன். '**அல்ஹம்துலில்லாஹ்**' இந்தச் சிறிது நேரத்திற்குள் அவர்கள் கூறியவை என் உள்ளத்தில் எவ்வளவு தூரம் குடிகொண்டது என்றால் டில்லி ஹபஸ்கான்பேட்டையில் ஜூலை 12ந்தேதி இரவில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் மௌலானா அவர்களது உத்திரவுக்கிணங்க ஊழியனான நானும் இந்தத் தப்லீக் அழைப்பின் நோக்கம், முறைகளைப் பற்றிப் பிரசங்கம் செய்தேன்.

إِذَا أَرَادَ اللهُ شَيْئاً هَيَّأَ أَسْبَابَهُ

**"வல்லமை மிக்க அல்லாஹ் ஏதேனும் ஒரு விஷயத்தை நாடிவிடுவானாகில் அதற்குரிய வசதிகளையும் தயார் செய்துவிடுகின்றான்".** நத்வாவின் சில ஆசிரியப் பெரியார்கள் அவர்களுள் குறிப்பாக எமது ஆப்த நண்பர் மௌலானா அபுல் ஹஸன் அலி ஸாஹிப் (**ஸல்லமஹுல்லாஹுதஆலா வரபஅஷானுஹு**). (இப்பெரியர் நத்வத்துல் உலமாவின் முன்னாள் பிரின்சிபால் ஹஜ்ரத் மௌலானா ஸய்யித் அப்துல் ஹை ஸாஹிப் ரஹ் அவர்களது இளையபுதல்வராவார். இவரே நமது இந்த நூலின் மூல ஆசிரியர். இவரின் மூலமாகப்பெரும் பெரும் சேவைகளை எதிர்பார்க்கிறோம்.) மௌலானா இல்யாஸ் ரஹ் அவர்களின் சிறந்த தன்மைகள், அவர்களது அழைப்பின் நோக்கங்கள், முக்கியத்துவங்களின் அனுதாபியாக இருந்தார். அவர் என்னிடத்தில் அவர்களைப் பற்றிக் கூறுவார்; அவர்களை லக்னோவிற்கு அழைத்துவரும் விஷயமாக

என்னிடத்தில் ஆலோசனையும் கேட்பார். ஆனல் அதுவரை சந்தர்ப்பம் வாய்க்காததால் இவ்விஷயம் ஆலோசனைக்கப்பால் செல்லவில்லை.

மௌலானு அவர்களைத் தானபோனிலும், டில்லியிலும் நான் சந்தித்த அதே சமயத்தில் அவர்கள் லக்னேவிற்கு விஜயம் செய்யும் பிரயாணப் புரோகிராமும் தயாராகிவிட்டது. மௌலானு அபுல் ஹஸன் அலி, மற்றுமுள்ள நண்பர்களின் அழைப்பிற்கிணங்க மௌலானு இல்யாஸ் அவர்களும், கூட 60 நண்பர்களும், முபல்லிகீன்களும் லக்னே வருவதாக முடிவு செய்துகொண்டார்கள். ஜுலை மாத மூன்ரும் வாரத்திலிருந்து நான்காம் வாரம் வரை இப்பெரியார்கள் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தார்கள். தாருல் உலூம் நத்வத்துல் உலமாவுக்குக் கிடைத்த பாக்கியமேபாக்கியம்! அதிலே அனைவரும் 10 நாள் தங்கினர்கள். முபல்லிகீன்களில் பெரும்பாலோர் மத்ரஸாவின் மஸ்ஜிதிலேயே தங்கினர்கள். சுருங்கக்கூறின் அந்த ஒருவாரம்,பத்து நாளைக்குள் தாருல் உலூம் அறபிக் கலாசாலை என்றுமே கண்டிராத ஆத்மார்த்தக் காட்சியினைக் கண்டு களிப்புற்றது. இது ஏழைகளின் கூட்டம்! (ஸுலஹா அத்கியா) பெரியோர்கள், நாதாக்கள் குழுமியிருந்த ஜமாஅத்!! இக்குழுவிற்கு அல்லாஹ்வின் திருவுளப் பொருத்தத்தை அடைந்துகொள்வதைத் தவிர்த்து உலகின் எவ்வித நோக்கமும் இல்லாதிருந்தது. நிகழ்ந்தவை எல்லாம், அப்புனிதப் பாதையிலே தான். கோரப்பட்டவைகளெல்லாம் அவனது சம்பந்தத்திற்காக வேண்டித்தான்!

# நான் கண்ட பெரியார்கள்.

பெரியோர்களைக் கண்டேன்! அவர்கள் உள்ளத்திலே, இந்தியாவில் இஸ்லாத்திற்கு உயிரூட்டி முஸ்லிம்களைச் சீர்திருத்த வேண்டும் என்ற ஒரே தாகமிருந்தது. அவர்களின் தொழுகைகளிலே, அவர்களின் பிரார்த்தனைகளிலே, தஹஜ்ஜுத் (நடுநிசி) வணக்கங்களிலே, இரவு விழிப்புக்களிலே, திக்று தியானப் பெருக்கிலே இறைவனின் திருவுளப் பொருத்தத்தைத் தேடுவதின் ஒளிவு இலங்கிக் கொண்டிருந்தது.

அவர்களது பிரயாசைகள் முழுவதிலும், இறைவனது விருப்பத்திற்காக முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்ட ஏகத்துவமார்க்கத்தின் சரியானபோதனை அளிப்பதில், புனிதக் கலிமாவைச் சரிசெய்வதில், ஐங்காலத் தொழுகையின்பால் அழைப்புக் கொடுப்பவர்கள், முபல்லிகுகளின் ஜமாஅத்துக்களைச் சேர்த்துச் சேர்த்துச் சுற்றுப்புறங்கள், அண்டை கிராமங்களுக்கு தியாக உணர்ச்சியுடன் ஹிஜ்ரத் செய்விப்பதில் சரியான உத்வேகம் காட்டினர். இந்த அழைப்பை நான் எந்த அளவு விளங்கியுள்ளேனோ அதற்கு ஏற்ப எனது அபிப்பிராயமாவது:-

**பெயரளவிலுள்ள முஸ்லிம்களுக்குள் மெய்யான இஸ்லாத்தை நமது ஸர்வரே காயினாத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது (உஸூல்கள்) திட்டங்களின் அடிப்படையிலேயே புதிதாக தப்லீக் செய்வதாகும்.**

பிறிதொரு பிரசங்கி இந்த இயக்கத்தை நடந்து திரியும் மதரஸாவுக்கும் ஓடியாடும் ஆசிரமத்துக்கும் ஒப்பிட்டார்.

இந்த ஜமாஅத்துடன் சஹாரன்பூர், மழாஹிருல் உலூம் அறபிக் கல்லூரியின் ஹதீதுக் கலாவல்லுனப் பேராசிரியர் ஹஜ்ரத் மௌலானா ஜக்கரியா சாஹிப் அவர்களும், டில்லி பத்ஹுபூர் அறபிக் கல்லூரியின் ஆசிரியர் மௌலானா அப்துல் ஹக் சாஹிப் அவர்களும், மற்றும் மார்க்கப் பெரியோர்களும், டில்லியின் பிரபல வர்த்தகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். கிட்டத்தட்ட ஒருவாரக்காலமாக தாருல் உலூம் நத்வாவின் பல இல்லங்களில் தங்கி, பல மஹல்லாக்களில் கூட்டங்கள் நடத்தினர்கள். அதனின் தப்லீக் ஜமாஅத்தினர் அமலியத்தான வேலைகளில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டேயிருந்தார்கள். சில நாட்களுக்காக கான்பூர்வாசிகளின் அழைப்பிற்கிணங்கி இந்த காபிலா கான்பூருக்கும் சென்றது. அங்கே மஹல்லா வாரியாக இந்த அழைப்புப் பரத்தப்பட்டது. இவ்வகையில் இவ்வூழியனுக்கும் லக்னே, கான்பூரில் பன்முறை இந்த அழைப்பின் குறிக்கோளையும் முறைகளையும் பற்றிச் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. மற்றவர்களும் சொற்பொழிவாற்றினர்கள். அதில் மௌலானா அபுல் ஹஸன் அலி சாஹிப், மௌலானா மன்ஜூர் சாஹிப் நுஃமானி இருவர்களும் குறிப்பிடத் தக்கவராவர்.

செப்டம்பர் 1943.
**'மஆரிப்'** பிரபல உர்தூ திங்கள் வெளியீடு.

# தப்லீக் இயக்க வரலாறு.

மௌலானா முஹம்மது இல்யாஸ் ரஹ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுப் பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் தப்லீக் இயக்கத்தைப்பற்றி அறியாதார் நம்மில் எவரும் இருக்க முடியாது. அவ்வியக்கத்தால் மேவாத்தின் அஞ்ஞானம் நிறைந்த அகன்ற பூமி இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. அதன் வேகம் மேவாத் டில்லியின் எல்லையைக்கடந்து ஏனைய மாகாணங்களிலும் அயல் நாடுகளிலும் அதிதுரிதமாகப் பரவி வருகின்றது.

கடந்த காலத்தில் நமது மார்க்க லிபியிலே அதிகமாக உபயோகிக்கப்பட்டு வந்த வார்த்தை "தப்லீக்" ஆகும். அதிகமாக உபயோகிக்கப்பட்டு வந்ததாலும், பல்வேறான இலக்ஷியங்களை வைத்துக் கொண்டதாலும் இந்த வார்த்தையின் சரியான பொருளிலும், விளக்கத்திலும் அநேக திரைகள் வீழ்ந்து விட்டன. எனவே இவ்வியக்கத்தைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி வைப்பது மிகவும் பொருத்தமாகத் தெரிகிறது.

உலகில் தோன்றிய எல்லா நபிமார் (அலைஹிமுஸ்ஸலாம்)களும், மாந்தர்களை அல்லாஹ்வின்பால் அழைப்பது என்ற மிகப் புனிதமான பணியையே செய்துள்ளார்கள். இதுவே அவர்களின் இணையற்ற இதயகீதமுமாகும். ஒவ்வொரு நபியும் தத்தம் சமூகத்தினரை நோக்கி,

قَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا لَكُمْ مِنْ اِلٰهٍ غَيْرُهٗ

"எனது சமூகத்தினர்களே! அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனைத் தவிர்த்து நீங்கள் வணங்குவதற்குரிய நாயன் வேறு யாருமில்லை" (குர்ஆன்) என்றே அறைகூவி யழைத்தார்கள். இந்தத் தப்லீக் இயக்கத்திலும் இதுவே பிரதான வேலை. இவர்கள் தீனுக்காக வீட்டைவிட்டு வெளிக்கிளம்புகிறார்கள். மாந்தர்களிடத்துத் தாங்களே நடந்து செல்லுகிறார்கள். மக்கள் தங்களைத் தேடி வரட்டும் என்று எதிர்பார்ப்பது கிடையாது. நானில மாந்தர் யாவரும் தமது ஆத்மிக இலாப நஷ்டத்தின்பால் சிறிதும் அக்கறை காட்டாதிருக்கின்றார்கள். ஆனால் இவ்வியக்கத்தார் அவர்களைத் தாமாகவே தேடிச் செல்கிறார்கள். இவர்கள் தீனுக்காக எண்ணற்ற இன்னல், இடர்களைச் சகித்துப் பெரிதும் முயற்சி செய்கிறார்கள். இவர்கள் தமது சகாக்களுடன் தமது இலட்சியத்தைத் தேடி அடைந்துகொள்வதிலேயே மூழ்கி, உலகப்பற்றற்றவர்களாய்ப் பயித்தியக்காரர்களே போன்று மூலைமுடுக்குகளிலே, பாலைவன ஓடைகளிலே, மலைச் சிகரங்களிலே, ஜன சஞ்சாரமுள்ள இடங்களிலே, கிராம-நகரங்களிலே காடு காடாக, நாடு நாடாகச் சுற்றித் திரிகிறார்கள். திருவிழாக்கள், பஜார்கள், வீடுகளிலே சென்று, அல்லாஹ்வின் திருநாமம் செவியேறச் செய்கிறார்கள். அடைத்துக்கிடக்கும் தலைவாயல்களைத் தட்டித் திறந்து வீடுவீடாக அறைகூவி யழைக்கின்றார்கள்.

إِنِّي دَعَوْتُهُمْ جِهَارًا ثُمَّ إِنِّي أَعْلَنْتُ لَهُمْ

وَأَسْرَرْتُ لَهُمْ إِسْرَارًا

"அவர்களை நான் உரத்த தொனியில் அழைத்தேன்; அப்பால் அவர்களிடத்து நான் பகிரங்கமாகவும் கூறினேன்; இரகசியமாக அவர்களது காதுகளிலும் கூறினேன்" (குர்ஆன்) என்று ஹஜ்ரத் நூஹ் அலை அவர்கள் பிரலாபித்தார்களல்லவா?

## நபிமார்கள்

நபிமார்கள் அல்லாஹ் உடனும் தொடர்பு கொள்கிறார்கள்; மாந்தர்களுடனும் கலந்துறவாடுகிறார்கள். ஜிப்ராயீல் அலை கூடச் சென்றடைய முடியாத ஸ்தானத்திற்குச் செல்கிறார்கள். அதே சமயத்தில் அவர்களை மக்கள் பார்த்து,

مَالِ هٰذَا الرَّسُوْلِ يَأْكُلُ الطَّعَامَ وَيَمْشِيْ فِي الْأَسْوَاقِ

"இந்த றசூலுக்கு வந்ததென்ன? உணவு உட்கொள்கிறார்; மேலும் கடைத்தெருவில் நடக்கிறார்" (குர்ஆன்) என்று பரிகாசத் தொனியில் கூறுமளவுக்கு பூமியில் உலவுகிறார்கள்.

மிஃராஜுக்குச் சென்று, மாந்தர்கள் நற்பலன் அடையும் பொருட்டாகவும், நேர்வழி அடையும்

பொருட்டாகவும் துன்பம் நிரம்பிய இம்மண்ணுல குக்குத் திரும்பிவருவது இறைவனது தூதுத்துவத் தின் தன்மையாகும். சுருங்கச் சொல்லுமிடத்து மாந்தரின் நன்மைக்காக, தனித்திருப்பதைவிட உலகசஞ்சாரத்திற்கும், துறவறத்தைவிட இல்லறத் திற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றார்கள். அவர் கள் மாந்தர்களுக்கிடையே அல்லாஹ்வின் சட்டங் களைப் பரத்தி அவ்வழியிலே பிரயாசைப் படுவதின் மூலமாக, இறைவனை அணுகும் மார்க்கத்திலுள்ள கட்டங்களைக் கடத்தி விடுகின்றார்கள். அவர்கள் கடமைகளை நடைமுறையில் கொணர்ந்து பரத்தி, அவைகட்கு உயிரூட்டும் முயற்சியின் வாயிலாக, மக்களை அல்லாஹ் வரையிலும் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறார்கள். வேலைக்கு உதவாதவர்க ளிடத்திலெல்லாம் வேலை வாங்கி விடுகிறார்கள். அறி விலிகளை உலகப் பேராசிரியர்களாகவும், வழிதவறி யவர்களை அகிலத்தவருக்கு வழிகாட்டிகளாகவும், பாமரர்களை மார்க்கப்பிரச்சாரகர்களாகவும் ஜெகத் தின் சீர்திருத்தக்காரர்களாகவும் சமைத்துவிடுகின் றார்கள்.

## நமது நாயகம்[ஸல்].

நமது றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் இறைவன் தூதர்களுக்கெல்லாம் தலைவ ராவார். ஏனெனில், "றசூல்" எந்தத் தன்மையால் பொதுமக்களைக்காட்டிலும் சிறந்து விளங்குகிறாரோ அந்தத் தன்மையில் றசூல்மார்கள் யாவரைக் காட் டினும் நமது நாயகமவர்கள் சிறந்து விளங்குகிறார் கள். அதில் நபி பெருமானாரவர்களது தப்லீகும்

அவர்களின் தப்லீக் முறையும் மிகவும் அகன்று விரிந்ததாக இருப்பதுடனே, மிக மிக எளியதாக வும் சாதாரணமாகவும் அமைந்துள்ளது நாயக மவர்கள் இஷாஅத்துல் இஸ்லாம் தப்லீகிற்காக எவ்விதக் கலைக்கூடங்களையும் குறிப்பிட்ட ஸ்தாப னங்களையும் நிர்மாணித்தது கிடையாது என்னும் உண்மையை நபி பெருமானவர்களது சரித்திர வர லாற்றினைப் பயின்ற மாணவன் என்ன! ஒவ்வொரு முஸ்லீமும் நன்கறிந்திருக்கின்றூர்.

இவ்வாறு நிர்மாணித்திருந்தாலும், இலட்சக் கணக்கான கலைக்கூடங்களாவது, ஸ்தாபனங்களா வது கோடிக்கணக்கான பணமாவது, இஸ்லாத்தின் இந்த பிரமிக்கத்தக்க முன்னேற்றத்திற்கும் அகில வுலக இஸ்லாமியப் பிரசாரத்திற்கும் காரணமா யிருந்திருக்க முடியாது.

ஆனல் நபி பெருமானவர்கள் வகுத்த முறை யாவது, எவரெவர் இஸ்லாத்தைத் தழுவுகின்றூரோ அவரவரும், மற்றவர்களிடத்தில் சென்று முயற்சி செய்யும்படியும், தீனுக்காகப் பிரயாசை எடுத்துக் கொள்ளும்படியும் உத்திரவிட்டதாகும். அம்முயற்சி யின் வாயிலாக அவர்கள் தாமே பரிபக்குவமடைந்து முன்னேறச் செய்வதோடு, மற்றவர்களுக்கும் போதித்துச் சீர்திருத்தும் ஊழியத்தையும் பெறு வார்கள். அதாவது முஸ்லிமல்லாதார், முஸ்லிம்கள் தீனுக்காகப் பிரயாசை எடுத்துக் கொள்ளும் ஸ்தலங்கள் ஆகிய இவைகளே அவர்களது கல்விச் சாலைகளாயும், பயிற்சிக் கூடங்களாயும் இருந்தன.

وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

"எவர்கள் நமது விஷயத்தில் முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு நாம் நமது வழியைக் காட்டுவோம்" (குர்ஆன்) என்ற இறைவன் வாக்குறுதி அங்கே நிறைவேற்றப்பட்டது. அவர்களுக்கு ஈமான், திடசித்தம், ஞானம், விளக்கம், கல்வியறிவு, சிந்தனை சக்தி ஆகிய இம்மை மறுமைப் பாக்கியங்களனைத்தும் கிடைத்தன. பெருவாரியான எண்ணிக்கை கொண்ட மக்களுள் போதனை, சீர்திருத்தப்பணி, இம்முறையினால் தான் முடியும். இவ்வித அனுஷ்டானப் பிரயாசையின்றி சம்பூர்ண வெற்றி அடைய இயலாது என்பது வெளிப்படை.

பெரும்பெரும் அரசாங்கங்களாலும் வல்லரசுகளாலும் ஒரு சமூகத்திடையே சம்பூரணச் சீர்திருத்த போதனை செய்யவோ, புரட்சி நிலைமை உண்டு பண்ணவோ இயலுவதில்லை. ஆனால் மேற்காட்டிய முறையின் மூலமாக நம் பெருமானார் ஸல் அவர்கள் அரப் நாட்டு ஒட்டகை மேய்க்கும் சமூகத்தினர்களையெல்லாம் உலகப் பெரும் போதகாசிரியர்களாயும், வழிகாட்டிகளாயும் மாற்றியமைத்தார்கள். இருபத்திமூன்று ஆண்டுகளுக்குள் இலட்சக்கணக்கான ஒரு பெருங் குழுவைத் தோற்றுவித்தார்கள். அக்குழுவினர் நடையிலும், குணத்திலும், ஒழுக்கத்திலும், உள்ளும்புறமும் ஒப்பற்றவர்களாய் விளங்கினார்கள்; விண்ணவரின் தன்மையும், தூயநடை

யொழுக்கமும் உள்ளவர்களா யிருந்தார்கள். (றலியல்லாஹு அன்ஹும்). அவர்களுக்காக எவ்விதப் பொருளாதார பலமும் செலவிடப்பட வில்லை. இவ்வேலைக்காக எவ்விதக் காரியாலயங்களும் நிறுவப்படவில்லை. இந்த நோக்கத்திற்காகப் பெரும் பெருங் கட்டிடங்கள் எழுப்பப்படவில்லை. ஆனால் சொற்ப ஆண்டுகளுக்குள் இப்பெரியார்கள் பயிற்சி பெற்றவர்களாகவும், நாகரீகப் பண்பாடுடையவர்களாகவும், அவர்கள் தாமே ரசாயன மூலஸ்தானங்களாகவும், ரசாயன சாஸ்திரிகளாகவும் மாறி விட்டார்கள். இம் மாபெரும் புனிதத் திருப்பணியால் ஏற்பட்ட பலன்களைக் கவனிக்குமிடத்தும் அவை (முஃஜிஸா)அற்புதங்களே! அதன் சாதாரண எளிய முறையைக் கவனிக்குமிடத்தும் அது அற்புதம்தான்!

அப்பால் காலமாறுதல் ஏற்பட்டவுடனே எற்கும் சுபாவமும் மக்கள் உள்ளத்திலே மெய்யான ஆர்வமும் பிறந்துவிட்டன. தீனின் மகத்துவமும் அல்லாஹ்வின் பெருமையும் கவுரவமும் அவர்கள் உள்ளத்திலே குடிகொண்டுவிட்டன. வசந்த காலத்திலே ஆயிரக் கணக்கான பூங்காவனங்கள் மலர்ந்துவிடுகின்றன. மழைகாலத்தில் பூமி குளிர்ந்து விதை போட்டவுடன் முளைக்கச் செய்யும் சக்தியை அடைந்துவிடுகின்றது. இத்தன்மையாக தீனின் இந்த வசந்தகாலத்தில் தானகவே ஆயிரக் கணக்கான கலைக்கூடங்களும் பயிற்சி ஸ்தலங்களும்

தோன்றிவிட்டன. கற்பது, கற்பிப்பது, நூல் இயற்றுவது போன்ற பணிகளும் ஆரம்பமாகிவிட்டன. இதன் மூலமாகப் பயனடைந்து இதற்கு கவுரவமளிக்கும் பேறும் வாய்ப்பும் நமக்கு கிடைத்துள்ளன வென்றால் அது முன்னாள் வேலைத் திட்டத்தின் பொருட்டாலும் சக்தியாலுமேதான்.

## நம் கடன்.

இன்று உலகம் இஸ்லாமிய ஆரம்பகாலத்தைப் போன்றே — அன்று — அதைவிட அதிகமாகவே அகன்று விரிந்து கிடக்கின்றது. தற்காலத்திலுள்ள போதனை, சீர்திருத்த ஸ்தாபனங்கள் மிகமிக அவசியமானவைகளே. ஆயினும் அவைகளைவிட மேலும் பல்லாயிரக்கணக்கான ஸ்தாபனங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் சமூகத்தின் பொதுவான போதனை, சீர்திருத்தத்திற்கும் புனருத்தாரணத்திற்கும் இவைகள் போதா. எனவே அந்த நபிமார்கள் வகுத்த முறையே சரியானதும் பயனுள்ளதுமாகும். அதாவது சமுதாயத்தினர் ஒவ்வொருவரும் தன்னையொரு அழைப்பாளராகவும் மதப்பிரசாரகராகவும் இவ்விஷயத்தில் இறைவனால் நேரே கட்டளையிடப் பட்டவராகவும் கருதவேண்டும்.

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ

بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللّٰهِ ط

" மக்களுக்(குப் பயன் அளிப்பதற்)காக எழுப்பப்பட்டவர்களில் நீங்கள் சிறந்த சமூகத்தினரா யிருக்கின்றீர்கள்; நீங்கள் நன்மை செய்யும்படி ஏவுகின்றீர்கள்; இன்னும் தீமையை விட்டு விலக்குகின்றீர்கள்; மேலும் அல்லாஹ்வைப் பரிபூரணமாக நம்புகின்றீர்கள்; (குர்ஆன்)

எனவே நாம் நபிமார்கள் போதனை முறைக்குப் புத்துயிரளிக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு சாரார் மாத்திரமின்றி ஒவ்வொரு பகுதியினரும், ஒவ்வொரு அந்தஸ்திலுள்ளவர்களும் தமது தொழில்களுக்கிடையே மார்க்க ஊழியத்திற்காகவும் சிறிது நேரத்தை அவசியமாக ஒதுக்கிவைத்து, தனித்தனி ஜமாத்துகளின் ரூபத்தில், கொஞ்ச நேரம் கற்பது, கற்பிப்பதற்காக வீடுவீடாக அலையும், வீட்டை விட்டு வெளிச் செல்லும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஆலிம் ஜாஹில்களிடத்திலும், அறிஞர் அறியாதவர்களிடத்திலும், ஒவ்வொருவரும் தன்னைக் காட்டிலும் அறியாமலும் கீழ் நிலையிலுமுள்ள மக்களிடத்திலும் அல்லாஹ்வின் கட்டளைகளை எட்டுவிக்க முயற்சிக்க வேண்டும். கலிமாத் தெரிந்தவர்கள் கலிமாத் தெரியாதவர்களிடையேயும், தொழுபவர்கள் தொழுகை யில்லாதவர்களிடையேயும் தப்லீக் முயற்சி செய்ய வேண்டும்.

## முபல்லிகீன்களுக்கு

தப்லீக் ஜமாஅத்துடன் செல்லும் காலத்தை மிகவும் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், தீனின் ஆத்மிகப் பலாபலன்களைப் பெற்றுக் கொள்வதற்

காகவும் இவ்வழியில் எதிர்ப்படும் இன்னல்கள் பித்னுக்களை விட்டும் தப்பித்துக் கொள்வதற்காக வும் முபல்லிகீன்களுக்கு உபதேசிக்கப்படுவதாவது, அவர்கள் அல்லாஹ்வின் ஆக்ஞைக்குச் சிரம் பணி வதையும் வழிப்படுவதையுமே நிய்யத்தாகக்கொள்ள வேண்டும். எந்த மக்களிடையே தப்லீக் செய்வதற் காகச் செல்லுகிறார்களோ அம்மக்களுக்கு (ஹிதாயத்) நேர்வழி காட்டுவதற்காக என்று கருதுவதற்கு பதி லாக, தாம் பரிபக்குவம் அடைவதும், தாம் உறுதி யாய் நிலைத்து நிற்பதுமே தமது நோக்கம் எனக் கருத வேண்டும். ஒவ்வொரு மூஃமினிடத்தும் பணி வாகவும் தாழ்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். கலிமா ஓதியவர்களுக்கு கௌரவமும், கண்ணியமும் அளிக்கும் பழக்கத்தைக் கைக் கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தொந்திரவு கொடுப்பதையும் அவர்களை இழிவுபடுத்துவதையும் ஹராமாகக் கருத வேண்டும். வெளிச் செல்லும் காலத்தில் தமது நேரத்தைக் திக்ரிலும், குர்ஆன் ஓதுவதிலும், போதனையிலும், மார்க்க கிரந்தங்களை ஆராய்ச்சி செய்வதிலுமே கழிக்க வேண்டும். அமல் களில் சரியான மதிப்பும் மெய்யான ஜீவசக்தியும் உண்டாவதற்காக பர்லுகள், நபில்கள் அனைத்தை யும் ஈமான் இஹ்த்திஸாபுடன், அதாவது அல்லாஹ் வின் வாக்குறுதிகளை நம்பி அவைகளை அடைந்து கொள்ளும் ஆசையாலேயே செய்ய வேண்டும். தீனுக்காகத் தொண்டு புரிவதற்கும், உயிரை அபா யத்துக்குள்ளாக்குவதற்கும், உயிரைத் தியாகஞ் செய்வதற்கும் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டே

இருக்க வேண்டும். காரண காரிய சாதனங்களைப் பூஜிப்பதைக் கைவிடுத்து, சர்வசக்தனை அல்லாஹ்வைப் புகழ்ந்தேத்துவதையே தேர்ந்தெடுத்துக் கடைப்பிடிக்கவேண்டும். பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் பணிபுரியும் உணர்ச்சியை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.

அறிவிற்கும் அனுஷ்டானத்திற்கும் ஏற்ற இந்தத் திட்டம் நமது சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும், நபிமார்களின் திட்டத்திற்குப் பரிபூரணமாக ஒத்திருக்கிறது. நபிமார்களின் திட்டத்தில் அமைந்திருந்த அத்தனை மெய்ஞ்ஞானங்களும் அபிவிருத்திகளும் பலன்களும் இதில் ஒருங்கே அமைந்துள்ளன. அல்லாஹ்வை அணுகுவதற்கு இது சந்தேகமில்லாமல் நேரிய மார்க்கமாகும். பர்ளுகளின் மூலம் எந்த அனுக்கிரஹம் கிடைக்கின்றதோ அது நபில்களின் மூலம் கிடைப்பதில்லை.

مَا تَقَرَّبَ اِلَيَّ عَبْدِىْ بِشَيْئٍ اَحَبُّ اِلَيَّ مِمَّا افْتَرَضْتُ

عَلَيْهِ

"எனது அடியான் பர்ளுகளை ஆற்றுவதின் மூலம் என்னை அணுகுவது ஏனையவைகளின் மூலம் என்னை அணுகுவதைவிட எனக்கு மிகவும் விருப்பமானதாகும்" என்று (ஹதீஸ்குதுஸியில்) அல்லாஹ் கூறுவதாக நபி நாயகம் ஸல் நவின்றிருக்கிறார்கள். பர்ளுகளிலும் மேலான பர்ளுகளைச் செய்வதின் மூலம்

கிடைக்கும் அனுக்கிரஹம் ஏனைய பர்ளுகளால் கிடைப்பதில்லை. இதைவிட இஸ்லாத்தின் கடமைகளும் கட்டளைகளும் மறுமலர்ச்சியடைந்து நடைமுறையில் கொண்டுவரும் ஓர் முயற்சியின் அந்தஸ்து யாதாயிருக்கும்? ஒரு சுன்னத்தை உயிர்ப்பிப்பதற்கு ஐம்பது ஸஹாபாக்களுக்குரிய நன்மைகளும் நூறு ஷஹீதுகளின் அந்தஸ்தும் கிடைக்குமென்று வாக்களிக்கப்பட்டுள்ளதென்றால், பர்ளுகளுக்குப் புத்துயிரூட்டுவதால் கிடைக்கவிருக்கும் நன்மைகளும் அந்தஸ்தும் எத்துணை மகத்தானதாயிருக்கும் என்று நாமே யூகித்துக் கொள்ளலாம். தீனுக்காக எடுக்கும் பிரயாசை அல்லாஹ்வின் அருள் சொரியப்படும் செயல்களைச் சேர்ந்ததாகும்.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَاجَرُوا وَجَاهَدُوا

فِي سَبِيلِ اللهِ أُولَٰئِكَ يَرْجُونَ رَحْمَتَ اللهِ

“நிச்சயமாக ஈமான் கொண்டு அப்பால் ஹிஜ்ரத்தும் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதும் (பிரயாசையும்) செய்தவர்கள் தாம் அல்லாஹ்வின் ரஹ்மத்தை எதிர்பார்ப்பதற்கு அருகதையுடையவர்கள்” (குர்ஆன்)

தீனுக்காக எடுக்கும் சரியானதொரு பிரயாசை ஆயிரம் திரைகளைத் திறந்து விடுகிறது; அறிவு, ஞானத்தின் நீரூற்றுகள் பொங்கி ஓடச் செய்கிறது.

مَنْ عَمِلَ بِمَا يَعْلَمُ أَوْرَثَهُ اللّٰهُ بِمَا لَمْ يَعْلَمْ

"அறிந்த மார்க்க அறிவைக்கொண்டு செயல் புரிந்தவனுக்கு அவன் அறியாத மார்க்க ஞானங்களையெல்லாம் உரிமைப் பொருளாக அல்லாஹ் அளிக்கின்றான்"

நமது தப்லீக் ஒரு முஸ்லிம், முஸ்லிமிடத்திலிருந்து பயன் அடைந்து கொள்ளும் வழியாகும். மார்க்க அறிஞர்கள் பற்றுடையவர்கள் மூலம் பயன் பெறுவதற்கும், அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் இது மார்க்கமாகும். இந்த சமூகத்தின் பலதிறப்பட்ட பிரிவினர்களின் சந்தேகங்களையும் தவறான எண்ணங்களையும் அகற்றுவதற்கும் இதுவே சாதனமாகும். இந்த இயக்கம் தீனின் வேர் தளிர்க்கச் செய்து, அதன் மூலம் சகல பாக்கியங்களும் தழைத்துக் கிளைத்துச் செழித்துப் பல்கிப் பெருகச் செய்வதாகும். தீனின் கலைகள் பயனளிக்கக் கூடியனவாயும் கவனிக்கத் தக்கனவாயும் மாறும். சீர்திருத்தப் பணிகளின் முயற்சியிலே சக்தி அதிகரிக்கும். மெய்யான ஆர்வமும், சத்தியத்தை ஏற்கும் தன்மையும் இதன் மூலம் பிறந்துவிடும்.

## கற்பனை அல்ல

இவை யாவும் வெறும் கற்பனைகள் அன்று. ஆனால் மிகமிக அஞ்ஞானமும் இழிநிலையும் எய்தியிருந்த ஒரு பகுதியிலே இந்தத் திட்டத்தின் அடிப்

படையில் இவ்வேலை தொடரப்பட்டும் அனுபவித்தும் பார்த்தாய் விட்டது. ஒரு சீர்திருத்தப் பணிக்காக அம்மாதிரியான வேறு இடம் ஹிந்துஸ்தானத்திலே தேடி அலைந்தாலும் கிடைக்காது. மேவாத் பகுதியிலே 30, 35 இலட்சம் முஸ்லிம்கள் வசித்து வருகிறார்கள். அவர்களின் நிலை அஞ்ஞானக் கால அரேபியாவின் நிலைக்கு நிகரா யிருந்தது. அம் மக்கள் கலிமாகூடத் தெரியாமல் வாழ்ந்து வந்தார்கள். ஒருவர் தொழுதால் மற்றவர்கள் கூடி நின்று வேடிக்கை பார்க்கும் அளவுக்குத்தான் தொழுகையைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் ஹிந்துக்களின் பெயர்களைச் சூட்டிக் கொள்வார்கள். அவர்களது பழக்க வழக்கம், சடங்கு ஆசாரம் அத்தனையும் ஹிந்துக்களைப் போன்றவை தாம். (இவ்விதமாகவே அவர்கள் தங்களுக்குள் நிகாஹ் செயது கொள்வதை இழிவாகவும் கேவலமாகவும் கருதி வந்துள்ளார்கள். முதலில் நிகாஹை ஹறாமாகவும் குப்ராகவும் கருதிக் கொண்டிருந்தவர்கள், அப்பால் நாவினால் ஹலால், ஜாயிஸ் எனக் கூறிக்கொண்டு, நடத்தையிலே அதை ஹறாமாகக் கருதலானார்கள். **நூஹ்** என்ற தாலுகாவைச் சார்ந்த **இடாவட்** என்ற கிராமத்திலே ஒரு ஆணும் பெண்ணும் தமக்குள் நேசமாகியவுடனே, இங்கே நிகாஹ் செய்து கொண்டால் சமூகம் மிகவும் தொந்திரவு விளைவிக்கும் எனக் கருதி, வெளியூரில் சென்று நிகாஹ் செய்து கொண்டு **குடுகாவ்** என்ற ஜில்லாவிலே வாசஞ் செய்து வந்தார்கள். ஆனால் புனித றமலானின் இறுதி ஜும்ஆவிலே, மண

முடித்த அந்த மாப்பிள்ளையை நோன்புப் பெருநாளின் மூன்ருவது நாள் ஜும்ஆ அன்று, அந்த மௌட்டிய சமூகத்தினர் கொலை புரிந்து, கைகால்களை முறித்து, மண்ணெண்ணெயினுல் எரித்துப் பொசுக்கிச் சாம்பலை சமுத்திரத்திற்குக் கொண்டு சென்று கரைத்து விட்டார்கள் என்ருல், அவர்களது மௌட்டியத்திற்கு மற்ருெரு உதாரணமும் வேண்டுமோ?) இது மட்டுமா? அவர்கள் இணை வைத்து விக்ரஹ ஆராதனையும் செய்து வந்தார்கள்; கல்வி விஷயத்திலோ சுத்த சூனியம்.

இந்தச் சமூகச் சீர்திருத்தத்திற்கும் போதனைக்கும் நமது இந்த வேலைத்திட்ட முறையைத் தவிர்த்து வேறு வழியே இல்லாதிருந்தது, சுருங்கச் சொல்லுமிடத்து அந்தப் பகுதியிலே இவ்வேலை தொடரப்பட்டது. முடிவில் என்ன நிகழ்ந்ததென்ருல், இன்று அப்புனித பூமியிலே பிரமிக்கத்தக்க புரட்சி ஏற்பட்டிருக்கின்றது. சரியான இஸ்லாமிய ஜீவியமும் மார்க்கப் பற்றின் நமூனக்களும் அங்கே தோன்றியுள்ளன. அவை தமது எளிமையாலும் உத்வேகத்தாலும் ஆயிரத்து நானூறு ஆண்டுக் காலத்திற்கு முன் வாழ்ந்து வந்த நம் முன்னேர்களான ஸஹாபாக்களது வாழ்க்கையின் ஞாபகத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. தீனுக்காக முயற்சி செய்வதிலும், நாட்டைத் துறப்பதிலும், சிரமங்களை மேற்கொள்வதிலும் இந்த சமூகத்தினர் இந்தியாவிலே உலக முஸ்லிம்களனைவருக்கும் ஓர் நமூனவாகவும் எடுத்துக்காட்டாகவும் சமைந்துள்ளார்கள்.

அப்பகுதி முழுவதிலுமுள்ள பொதுவான நிலை எந்த அளவு மாறியுள்ள தென்றால், இந்த இயக்கத்தின் பொருட்டால் தீனின் ஆர்வம் பிறந்து ஆயிரக் கணக்கான மஸ்ஜிதுகளும், நூற்றுக்கணக்கான அரபி மத்ரஸா, மக்தபுகளும், பன்னூறு ஆலிம்கள் ஹாபிஸ்களும் தோன்றியுள்ளார்கள். (சமீபத்தில் நாங்கள் மேவாத் சென்றிருந்தபோது பத்துப் பதினொரு வயதுள்ள சிறுவன் ஒருவன் தனது இனிமையான குரலில் தஜ்வீத் சட்டத்தைத் தவற விடாது ஓதிய கிராஅத் எனது காதுகளில் இன்னும் ரீங்காரஞ் செய்து கொண்டிருக்கிறது வல்ல நாயன் தனது பேரருளை அங்கே சொரிந்துள்ளான் போலும்.) எந்தப் பகுதி பன்னூற்றாண்டுகளாக இஸ்லாமிய ஜோதியின் பேறு அற்றுக் கிடந்ததோ அப்பகுதி சிறுகச் சிறுகப் பிரகாசித்திலங்கத் தொடுத்து விட்டது. எந்த சமூகம் ஹிந்துஸ்தானத்தின் சரித்திரத்திலே கொள்ளைக்கும் கொலைக்கும் அட்டூழியத்திற்கும் அக்கிரமத்திற்கும் எடுத்துக் காட்டாக இருந்ததோ. எந்த சமூகத்தின் பீதியால் மன்னர் நாஸிருத்தீன் மஹ்மூதின் காலத்திலே டில்லியின் கோட்டைக் கதவுகள் பொழுது அடைவதற்கு முன் அடைபட்டுக் கொண்டிருந்தனவோ, அந்த சமூகம், இன்று அமைதிக்கும் நம்பிக்கைக் கைக்கும் நாணயத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அந்தப் பகுதியிலே குற்றங்கள் பல்லாண்டுகளாகவே கேட்பதற்கு அரிதாகுமளவுக்கு அடியோடொழிந்து விட்டன. எந்த சமூக மக்கள் கேவலமாகவும் இழிவாகவும் கருதப்பட்டு

## முந்தைய முஸ்லிம்களும் போதனுமுறையும்

எழுதப்படிக்கவறியாதவர்கள் பெரும்பான்மையினராயிருந்த ஒரு சமூகத்தினரிடையே நபிபெருமானவர்கள் அனுப்பப்பட்டார்கள். பரிசுத்த குர்ஆனிலே தூய தூதர் ஸல் அவர்களது தூதையும் போதனையையும் பற்றிக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் அச்சமூகத்தினரை (உம்மிய்யீன்கள்) எழுதப்படிக்கவறியாதவர்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِّنْهُمْ

"எழுதப்படிக்கவறியாதவர்களிடை அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பியவன் அவனே!"

(சூரே ஜும்ஆ)

இவ்வாறு அவர்களது அறியாமையை விளக்கிய புனித குர்ஆன், வழிகேட்டில் அவர்கள் அடைந்திருந்த உச்சஸ்தானத்தைப் பற்றி வெகு ஸ்பஷ்டமாகக் கூறுகின்றது:-

وَإِن كَانُوا مِن قَبْلُ لَفِي ضَلَالٍ مُّبِينٍ

---

வந்தார்களோ அவர்கள் இன்று பிரசித்திபெற்ற தீனின் மத்ரஸாக்கள் நடைபெறும் இடங்களுக்கும் பெரும்பெரும் நாதாக்கள் உள்ள இடங்களுக்கும் தப்லீகிற்காகச் செல்கிறார்கள். உலமாக்களும் மஷாயிகுகளும் கிழிந்த அழுக்கு நிற ஆடைகளணிந்த இந்த முபல்லிகீன்களுக்கு கவுரவ மரியாதைசெலுத்துகிறார்கள்.

"இதற்குமுன் அவர்கள் பகிரங்க வழிகேட்டில் சிக்கி இருந்தார்கள்." (சூரே ஜும்ஆ)

وَكُنْتُمْ عَلَىٰ شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ

"நீங்கள் ஒரு நெருப்புக்குண்டத்திற்கு அருகாமையிலிருந்தீர்கள்." (சூரே ஆலஇம்ரான்) இறைவனை அறியாது எண்ணும் எழுத்தும் தெரியாது தட்டழிந்த இச்சமூகத்திற்கு வெறும் ஏட்டுப்பாடபோதனை மாத்திரம் அளித்திருந்தால் பலன் எதையும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் வேதஞானத்தின் அனுஷ்டான அறிவுகளைப் புகட்டி, உயர்ந்த நாகரிகங்கள், உன்னத நடத்தைகள், விண்ணவர்களின் தன்மைகள் உள்ளவர்களாயும், பரந்த இப்பாருலகின் போதகாசிரியர்களாயும், சீர்திருத்தச் செம்மல்களாயும் அவர்களைச் சமைக்கவேண்டியதா யிருந்தது.

يَتْلُوا عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ

(தூதர்) "அவர்களுக்கு அல்லாஹ்வின் வேதவசனங்களை ஓதிக்காண்பிக்கிறார்; மேலும் அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார்; அன்றியும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்கிறார்"

(சூரே ஜும்ஆ)

இத்துணைப் பெருஞ்சமூகத்திற்குள் புரட்சி விளைவிப்பதற்கு (அதிலும் அம்மக்கள் கல்வியறிவுபெற ஆர்வமில்லாதவர்கள் மாத்திரமின்றிச் செவிகொடுத்துக்

கேட்கக்கூடத் தயாராக இல்லாமலிருக்கும் போது) பெரும்பெரும் போதனைச்சாலைகளும்; எண்ணிறந்த கலைக்கூடங்களும் எதைச் சாதித்திருக்க முடியும்? அவை யாவும் பயனற்றவையாக இருந்ததுடனே போதாதனவாயுமிருந்தன. அக்கால கலைக்கூடங்களுக்குரிய சாதனமோ, ஆசிரியரோ, மாணவனோ கிடைப்பதே அரிதாயிருந்தது. அவ்வாறே ஓரிரு கலைக்கூடங்களோ; பல பெரும் போதனைச்சாலைகளோ நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் அதனுல் ஏற்படும் பயனும் சக்தியும் ஒரு எல்லைக்குள்தான் கட்டுண்டு கிடந்திருக்குமென்பது தெளிவு. கூடுமானல் ஆர்வமும், ஆற்றலுமுள்ள சிலர் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்வர். கற்ற பெருமையும் மமதையும் மண்டையிலேறி தங்களையொரு தனிப்பட்ட சாரார்களெனக் கருத முற்பட்டுவிடுவர். இறுதியாக சர்வ சமூகத்திற்குள்ளும் பரவவேண்டிய இக்கல்வி ஓரிடத்திலே குவிந்து நின்றுவிடுவதைத் தவிர்த்து வேறு எப்பயனையாவது எதிர்பார்க்க முடியுமா?

## கல்விக்கு முன் ஈமான்.

இந்த ஏகபோகமான புனருத்தாரண நிலையைத் தோற்றுவிப்பதற்காக நம் பெருமானர், அல்லாஹ்வின் வழிகாட்டலால் கையாண்ட முறையின் மூலமாக ஏற்பட்டபலனையும் வெற்றியையும் கவனிக்குமிடத்து அஃதோர் அற்புதமாகவே அமைந்துள்ளது. முதன்மையாக அச்சமூகத்திற்குள் தீனின் ஆர்வமூட்டி, மார்க்கக்கல்வி கற்பதின் அவசியத்தை வலியுறுத்தி, அல்லாஹ் அளித்த வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை கொள்வதையே கற்றுக்கொடுத்தார்கள்.

تَعَلَّمْنَا الْاِيْمَانَ ثُمَّ تَعَلَّمْنَا الْقُرْآنَ

"நாங்கள் முதன்மையாக அல்லாஹ்வின் உபதேசங்களின்மீது நம்பிக்கை கொள்வதைக் கற்றோம்; அப்பால் குர்ஆனைக் கற்றோம்." என்று ஒரு ஸஹாபி குறிப்பிடுகிறார்.

அப்பெரியார்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியேறி சிரமங்களைமேற்கொண்டார்களென்றால், அது இதே ஈமானின் சக்தியாலும், மெய்யான ஆர்வத்தாலுமே தான். அவர்கள் தாம் ஈடேற்றமும், நேர் வழியும் அடைந்துகொள்வதற்கு அவசியமான கல்வியைக் கற்பதற்கு முயற்சித்தார்கள். இதற்காகப் பிரயாணஞ் செய்வதை **இபாதத்** என்றும், இதற்காகச் சிரமமெடுப்பதை **ஜிஹாது** என்றும், இதற்காக உயிர்நீத்தலை **ஷஹாதத்** என்றும் கருதினார்கள். கற்றறிந்த ஒவ்வொருவரும் தாம் தீனுக்குச்செலுத்த வேண்டிய கடமையெனக் கருதித் தனக்குத் தெரிந்ததைப் பிறருக்கும் கற்றுக்கொடுத்தார்கள்.

**அசைந்து திரியும் அனுஷ்டானக் கலைக்கூடம்.**

இல்மு அமலுடனும், அமல் இல்முடனும், கற்பது கற்பிப்பதுடனும், கற்பிப்பது கற்பதுடனும் தொடர்ந்து நடைபெறும் வகையில் கற்பது கற்பிப்பது என்ற முறை துவக்கத்திலிருந்தே வகுக்கப்பட்டிருந்தது. இஸ்லாமிய வாசஸ்தலங்கள் ஒவ்வொன்றும் ஓர் அசைந்துதிரியும் அனுஷ்டானக் கலைக்கூடமாகவே அமைந்திருந்தது. அதில் வதியும் ஒவ்வொருவரும் தமக்குத்தாம் மாணவராயும் பிறருக்கு ஆசிரியாராயும் இருந்தனர்.

அவர்கள் அந்தக் கல்வியின் பாடத்தைத் தனிமையிம் உட்கார்ந்து சிந்திப்பது கிடையாது; ஆனால் மக்களுக்குப் போதித்துத் தருவதால், அதற்காக சிரமங்களை மேற்கொள்வதால், அவ்வழியில் எதிர்ப்படும் இன்னல்களை முகமலர்ச்சியுடன் சகிப்பதால் அக்கல்வியின் உருவம் மனதிற்குள் பதியவைக்கப்பட்டது. போதனை முறை, சீர்திருத்தம், மனப் பரிசுத்தம் போன்றவை யெல்லாம் மக்களிடைக் கலந்துறவாடுவதிலும், அன்றாடகம்தோன்றும் பிரச்சினைகளிலும் அனுஷ்டானவாழ்க்கைகளிலுமே நிகழ்ந்துகொண்டிருந்தன. விளக்கமாகச் சொல்லப்போனால் அங்கே நீரில் நீந்துவதின் பழக்கங்களைத் தரையில் கிடத்திப் பழக்குவதில்லை; கைகளால் நீந்தச்செய்வதுமில்லை. ஆனால் வாழ்க்கை என்னும் நீர்ச்சுனைகளில் வீழ்த்திக் கைகால்களை அடித்து நீந்தப் பழக்கப்பட்டது. கலிமாவைக் கற்று அல்லாஹ் றசூல் மெய்யெனச் சாட்சியங் கூறிய ஒருவர் உணவைத் தேடுவதற்குப் பதிலாக அல்லாஹ்வைத் தேடித்திரிவதில் முனைந்திருந்தார். அவர் சுயநல வளர்ச்சிக்குப் பாடுபடுவதற்குப்பதிலாக தீன் தழைத்தோங்குவதற்காக உயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாது உழைத்தார். இஸ்லாத்தைத் தழுவிய மாத்திரத்தில் அவர் சோதனைச்சுழலில் வீழ்ந்தார். சோதனை யென்னும் உறைகல்லில் தோய்ந்து சொற்பக் காலத்திற்குள் அவர் புடம்போட்ட பொன்னே போல் பொலிவடைந்து வெளியேறினர்.

அனுஷ்டான ரீதியில் அமைந்த இப்போதனை சமர்க்களங்களிலே, தொழில் வேலை பராக்குகளிலே,

வாழ்க்கைப் பிரச்சினைகளிலே, பிரயாண ஸ்தலங்களிலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. நடந்து திரியும் ஆத்மாக்களின் மூலம் அவர்களுக்குப் போதனை யளிக்கப்பட்டதேயன்றி ஸ்தம்பித்து நிற்கும் ஏடுகளின் மூலம் அன்று. அவர்களின் பேருறவால் ஒவ்வொரு தருணத்திலும் தேவைக கேற்ற அனுஷ்டான போதனை மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. அவர்களுடனிருப்பதால் தீனின் நுணுக்கமான விஷயங்களும் முறைகளும் மக்கள் தெரிந்தது மட்டுமல்லாமல், அதற்குரிய தகுதியும் ஆற்றலும் அவர்களிடையே பிறந்தன. ஒரு பாஷை பேசுபவர்களுடன் இருந்து அப்பாஷை கற்றுக் கொள்ளப்படுகிறது. நாகரிகமும் முற்போக்கும் உள்ள மனிதர்களுடன் கலந்துறவாடி, நாகரிகமும் முற்போக்கும் சிறந்த வாழ்க்கை முறைகளும் கற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறே மார்க்கப் பற்றுள்ளவர்களுடன் உறைந்து முற்றிலும் இயற்கையான முறையில், மார்க்க அறிவார்த்தங்களும் பழக்கவழக்கங்களும் கற்கப்பட்டுவந்தன. தீனைக்கற்பதின் இம்முறை ஒரு பாஷை பேசுபவர்களுடனிருந்து அப்பாஷையைக் கற்பதைப் போன்று எளியதும் இயற்கையானதும் பொதுவானதுமாகும்.

மக்களுடன் கலந்துறவாடுவதின் மூலம் தீனையும் அதன் கலையையும் புகட்டுவதும் ஏடு எழுத்துக்களுக்குப் பதிலாக மனிதர்களின் அனுஷ்டானம் மூலம் போதனை யளிப்பதும், பொதுவாக நபிமார்களுடையவும் குறிப்பாக நமது நபி பெருமானாரவர்களுடையவும் போதனாமுறையின் நிகரற்ற தன்மையாகும்.

ஒரு நூலிலிருந்து மறு நூலுக்கு ஒன்றை மாற்றும் வேலை அவர்களுக்குக் கிடையாது. அர்ஷுடையவனிடத்திலிருந்து பெறுவார்கள்; மக்களின் இருதயங்களில் எழுதி விடுவார்கள். அதன் வாயிலாக மற்றவர்களுக்கும் போதனை யளிப்பார்கள். இந்த போதனை முறையால் இலட்சக்கணக்கான மக்கள் எவ்வித சாதனமுமின்றி மிகச் சொற்ப நேரத்தில் அவசியமான மார்க்கக் கல்வியைக் கற்க முடிந்தது. வெறும் ஏட்டுப் படிப்பினால் விளையும் செயலின்மையும் பலனின்மையும் இவ்விதப் போதனை முறையால் விளைவதில்லை. ஏடுகள் தராசின் அந்தஸ்தை வகிக்கின்றன என்பது உண்மை. அவை மூலம் நேர்மையையும் பிழையையும் அறிந்து கொள்ள முடியும்.

مَنْ كَانَ مِنْكُمْ مُسْتَنًّا فَلْيَسْتَنَّ بِمَنْ قَدْ مَاتَ فَاِنَّ
الْحَيَّ لَا يُؤْمَنُ عَلَيْهِ الْفِتْنَةُ

"எவரேனும் தனக்கொரு நமூனவை எடுத்துக் கொள்வதாயிருந்தால் சென்றுபோன முன்னோர்களை நமூனவாக ஆக்கிக் கொள்வாராக; ஏனெனில் நிகழ்காலம் சோதனைக்காலம்; அதில் அமைதியை எதிர்பார்க்க முடியாது" என்று ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊது (றலி) கூறுவதைப் போன்று, முன்னோர்களைப் பின்பற்றுவதாயின் ஏடுகள் தாம் அதற்கு உறுதுணையாய் நிற்கின்றன. அவைகளுக்கேற்ப ஒழுகுவதும் அவசியமானதே.

எனினும் கிதாபுகள், ஏட்டுப் பிரதிகள் மூலம் பரி பூரணப் பலனை எதிர் பார்ப்பதற்கு ஸுஹ்பத் என்ற மக்கள் நல்லுறவும் அனுஷ்டான முன் மாதிரியும் இன்றியமையாதவை. ஏடுகளிலிருந்து பயன் பெறும் தகுதியும் திறமையுங்கூட நல்லுற வாலும் செயலாலுமே உண்டாகின்றன. ஆனால் பிற்காலத்தில் தவறு என்ன நிகழ்ந்ததென்றால் கிதாபுகள், ஏடுகள் மாத்திரமே மார்க்கக் கல்வி கற்பதற்குரிய சரியான சாதனங்கள் என்று கருதப் படலாயிற்று. ஏட்டுப் படிப்பைக் கொண்டு மாத் திரம் திருப்தியுற்றதால் மார்க்கக் கல்வியைக் கற்பது ஒரு பெருஞ் சிரமமிக்க வேலையாயும், நீண்ட பணி யாயும் வந்து முடிந்தது. அந்த வட்டாரத்திற்கு எல்லை கோலப்பட்டது. அலுவல் உள்ளவர் களும் இயலாதவர்களும் மார்க்கக் கல்வி பயிலும் பாக்கியமற்றவர்களாய், அதைக் கற்கும் விஷயத் தில் சோர்வடைந்தவர்களாய்ப் போனார்கள். இந்த சமூகத்தின் சொற்பத் தொகையினர், அவர்களுள் ளும் மத்ரஸாவின் போதனைக் கென்றே தமது வாழ்நாளின் ஒரு பகுதியை அர்ப்பணிக்கும் வாய்ப் புள்ளவர்கள் மட்டுமே தீனைக்கற்பதற்கும் கற்பிப்ப தற்கும் உரியவர்களாகக் கருதப்படலானார்கள். முஸ்லிம்களில் பெரும்பாலார் மார்க்கக் கல்விக்குத் தகுதியற்றவர்களாயும், அதைக் கற்கும் விஷயத்தில் ஆதரவற்றவர்களாயும் மாறி விட்டார்கள்.

ஆசிரியரின் தன்மை மாணவன் மீதும் படிகின் றது என்பது உண்மையெனின், ஏடுகளிலே ஸ்தம்பித்து நிற்கும் எழுத்துக்களின் மூலம் செய

லற்ற ஸ்தம்பனமும், உணர்ச்சியுடன் ஓடியாடித் திரியும் மனிதர்களின் மூலம் உணர்ச்சியும் உத்வேகமும் அனுஷ்டான பலமும் பிறக்கின்றன என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இவ்வாறே மக்கள் நல்லுறவாலும், தோழமை பூண்டு இயங்குவதாலும் செயலாலுமே தீனின் சரியான விளக்கத்தையும் அனுஷ்டான ஞானத்தையும் பெறமுடியும். சரியான ஓர் அசைவு ஆயிரம் திரைகளைத் திறந்து விடுகின்றது. மேன்மை மிக்க ஸஹாபாக்கள் கலந்துறவாடலாலும் ஊழியத்தாலுமே தீனையும் தீனின் கலையையும் கற்றார்கள். தீனிலும் கலாஞானத்திலும் தமக்குக் கிடைத்திருந்த தனிப்பெருந் தகுதியால் அவர்கள் இறுதி நாள் பரியந்தம் இணையற்றவராய் விளங்குகிறார்கள். தீனின் தத்துவார்த்தமும் கல்வியின் ஜீவசக்தியும் அதன் சத்தும் அவர்களுக்கு வாய்த்திருந்தன. அவர்களின் அருமை பெருமையை ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊது ரலி கூறிய பின்வரும் பொன்னுரை அழகிய பல கருத்துக்களுடன் தெளிவுபடுத்துகிறது

أُولٰئِكَ أَصْحَابُ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ أَبَرَّ النَّاسِ

قُلُوبًا وَأَعْمَقَهُمْ عِلْمًا وَأَقَلَّهُمْ تَكَلُّفًا

"முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அத்தோழர்கள், மக்கள் யாவரினும் மிக்க இருதய சுத்தியுள்ளவர்கள், மிக்க பேரறிஞர்கள், மிக எளியவாழ்க்கையைக் கடைப்பிடித்தவர்கள்"

ஸஹாபாக்களிடம் மேற்குறிப்பிட்ட இலட்சணங்கள் அமைந்திருந்தது மாத்திரமின்றி, குறிப்பிடத்தக்க மற்றொரு சம்பவமும் அக்காலத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தது. அதாவது, தேவையான மார்க்கக் கல்வி கற்பதற்காக, அவர்கள் புரிந்துகொண்டிருந்த அலுவல்களை தற்காலிகமாகத்தள்ளி வைத்துவிட்டு, அவர்கள் வசித்துக்கொண்டிருந்த வீட்டையும் நாட்டையும்விட்டுக் கிளம்பும்படி அழைப்புக் கொடுக்கப்பட்டது. வெளியே புறப்பட்டால்தான் நிம்மதியுடனிருந்து மார்க்க அறிவுகளைப் பெறமுடியும் எனவும், வாழ்க்கையிலொரு அனுஷ்டான மாறுதலையும் புரட்சிகரமான மனப்பான்மையையும் அடைந்துகொள்ள முடியும் எனவும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஹிஜ்ராத்துக்குப் பின் மதீனாவே இஸ்லாமியக் கோட்பாடுகளனைத்தும் காணப்படும் ஓர் மத்தியபீடமாய்த் திகழ்ந்தது. அங்கேதான் தீன் தழைத்துக்கிளைத்துச் செழித்திருந்தது. எனவே அறப் நாட்டின் அத்தனை நவ்முஸ்லிம்களும் தங்கள் தங்கள் இல்லிடங்களை விட்டுக் கிளம்பி, இந்த இஸ்லாமியச் சூழ்நிலைப் பீடத்திற்கு விஜயஞ் செய்து, தீனைக் கற்றுச் செல்லும்படி அழைப்புக் கொடுக்கப்பட்டார்கள்.

وَمَا كَانَ الْمُؤْمِنُونَ لِيَنفِرُوا كَافَّةً فَلَوْلَا نَفَرَ

مِن كُلِّ فِرْقَةٍ مِّنْهُمْ طَائِفَةٌ لِّيَتَفَقَّهُوا فِي الدِّينِ

ولينذروا قومهم اذا رجعوا اليهم لعلهم يحذرون

“மூமின்கள் அனைவரும் வெளிக்கிளம்பிச் சென்று விடக்கூடாது; ஆனால் ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு சாரார் தீனின் விளக்கத்தைப் பெறுவதற்காகவும், தமது சமூகத்தினரிடையே மீண்டுவருங்காலை அவர்கள் அஞ்சியொழுகும் பொருட்டு அவர்களை எச்சரிப்பதற்காகவும் வெளிக்கிளம்பிச் செல்ல வேண்டாமா?” (சூரே தௌபா) என்று குர்ஆன் மஜீது கூறி வெளியே புறப்படும்படி அவர்களைத் தூண்டியது! தீனையும் தீனின் கல்வியையும் கற்பதற்காக, செயலில் சிரத்தையும், உயிர், பொருளின் தியாகமும், சரீரப்பிரயாசையும், ஓரளவு தேவையாய் இருந்தன. மார்க்கப் பற்றையும் மெய்யான ஆர்வத்தையும் பெறுவதற்காக அவர்கள் தமக்கு விருப்பமானதை (உலக ஆசாபாசங்களை) உதறித்தள்ள ஆயத்தமாக வேண்டியதாயிருந்தது. தன் மனம் விரும்பியதை விடுத்து அதன் இச்சைக்கு மாறுபுரிவதே மனிதன்புரியும் பெருந்தியாகமாகும். இருப்பிடத்தை விட்டுப் புறப்படுவதால் இத்தன்மை எளிதில் கைகூடி விடுகின்றது. நூற்றுக்கணக்கான இன்ப சுகானுபவங்களின் சேகரிப்பே இருப்பிடம். அதைப் பிரிவதால் தாங்கமுடியாத சஞ்சலம் ஏற்படுகின்றது. இதற்குத்தான் குர்ஆன், ஹதீதின் பரந்த பரிபாஷையில் **ஹிஜ்றத்** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. முனாபிக்கீன்களைப் பற்றி குர்ஆன் கூறுவதாவது:-

فَلَا تَتَّخِذُوْا مِنْهُمْ اَوْلِيَاءَ حَتّٰى يُهَاجِرُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ

"அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத்துச் செல்லாதவரை அவர்களுள் எவரையும் நண்பராக ஆக்கிக்கொள்ளாதீர்கள்." (சூரே நிஸா)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சூரே தௌபாவின் வசனம் மதீனாவில் அருளப்பட்டது. அவ்வசனம் முனாபிக்கீன்கள் மதீனாவிலும் மதீனாவின் சுற்றுப் புறங்களிலும் வாழ்ந்துவந்தார்கள் என்பதை விளக்குகிறது.

وَمِمَّنْ حَوْلَكُمْ مِنَ الْاَعْرَابِ مُنَافِقُوْنَ وَمِنْ اَهْلِ الْمَدِيْنَةِ مَرَدُوْا عَلَى النِّفَاقِ

"உங்கள் சுற்றுப்புற கிராமவாசிகளில் சில முனாபிக்கீன்களும்: மதீனாவாசிகளில் சிலரும், நயவஞ்சகத்திலேயே பழகிப்போயிருக்கின்றார்கள்." (சூரே தௌபா)

ஆதலின் இத்திருவாக்கியத்தால் கருதப்படுவது, ஒன்றிருக்கில், சுற்றுக் கிராமங்களில் வசிக்கும் முனாபிக்கீன்களை மதீனாவிற்கு ஹிஜ்றத்துச் செய்வித்தல்; அல்லது மதீனாவாழ் முனாபிக்கீன்களை அல்லாஹ்வின் வழியில் ஜிஹாதிற்காக—பிரயாசையெடுப்பதற்காக—இல்லிடத்தை விட்டுப் புறப்படச் செய்தலாகும். உண்மை யாதெனில் சரீரப் பிரயாசையும்

ஆர்வமும் கவனமுமில்லாமல் சன்மார்க்கத்தின், சன்மார்க்கக் கல்வியின் சரியான பலாபலனைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆர்வமும் ஆசையுமில்லாதோருக்கு தீனின் பலாபலன்கள் கிடைத்துவிடுவது அல்லாஹ்றவினிடத்தில் தீனுக்கு இருக்கும் கவுரவத்திற்கு விரோதமாகும். தனது வழியில் பிரயாசை எடுப்பவர்களுக்கே தனது நேர்வழிகாட்டலையும் றஹ்றமத்தையும் தருவதாக அல்லாஹ்ற வாக்களித்துள்ளான்.

"நிச்சயமாக ஈமான்கொண்டு அப்பால் ஹிஜ்ரத்தும் அல்லாஹ்றவின்பாதையில் ஜிஹாதும்(பிரயாசையும்) செய்தவர்கள் தாம் அல்லாஹ்றவின் றஹ்றமத்தை எதிர்பார்ப்பதற்கு அருகதையுடையவர்கள்."(சூரே பகறு)*

மௌலானா முஹம்மது இல்யாஸ்ரஹ் அவர்களுக்கும் மற்றொரு நண்பருக்குமிடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்தில் இக்கருத்தையடக்கி மௌலானா அவர்கள் வரைந்ததாவது:-

اَلْاَجْرُ عَلَى قَدَرِ النَّصَبِ

"சிரமத்திற்குத் தக்கவாறே பலன் உண்டு"

"இம் மின்னல்வேகக் கடிதப் போக்குவரத்து ஒருகாலும் சரீரப் பிரயாசைக்கு ஈடாகாது. பெரும்பாலும் அல்லாஹ்றவின் உதவி தீனில் ஒருவனது பிரயாசையையே சார்ந்து நிற்கின்றது. மனிதன் ஏதேனுமொரு நோக்கத்திற்காக எந்த அளவு தன்னைத்தான் சிறுமைப்படுத்தி, சிரமங்களை

★ இந்த ஆயத்தை 20ம் பக்கத்திற் காண்க.

மேற்கொள்ளுவதின்மூலமாகத் தனது நிலைகளையும் உறுப்புகளையும் இருதயத்தையும் சக்திகளையும் சோர்வுறச் செய்து, பணியுந் தன்மையை அடைகின்றானோ, அந்த அளவுக்கு அல்லாஹ்வின் றஹ்மத் என்னும் கிருபை சொரியப்படுவதற்குக் காரணமாகும். எவ்வழியிலும் இடர்ப்படாமல் கவுரவத்தை எதிர்பார்ப்பது அனுபவத்தில் இயலாத விஷயமாகும்."

மற்றொரு கடிதம்:-

"தற்பொழுது நாம் சடப்பொருட்களில் எந்த அளவு மூழ்கிக் கிடக்கின்றோமென்றால், ஒருவரின் நற்குணங்களிலிருந்து மற்றொருவர் பங்குபெறும் வழக்கம் ஒழிந்துவிட்டது. அனுஷ்டானப் பிரயாசையின் வாயிலாக இரத்தத்தையும் வியர்வையையும் ஒன்றாகப் பாவித்து, பிரயாசைக்குச் செலுத்த வேண்டிய உரிமையைச் சரிவர நிறைவேற்றி ஷரீஅத்தைக் கற்பது கற்பிப்பது என்ற சரியான முறையைக் கைவிடுத்து, தற்பொழுது பயன் பெறுவதும் பயன் அளிப்பதும் சாரமற்ற நாவு ஒன்றின் வேலையாகவே வந்து முடிந்துவிட்டது.

பிறிதொரு கடிதம்:-

"பெருமையும் புகழுமிக்க அல்லாஹ் மாற்றவும் திருத்தவுமுடியாத சரியான தனது இயற்கை நியதிப்படி (ஹிதாயத்) நேர்வழியைப் பிரயாசையுடனேயே சம்பந்தப்படுத்தி வைத்துள்ளான். ஒருவன் பிரயாசையெடுத்தெடுத்துத் தன்னகத்தே அடங்கியிருக்கும் சக்திகளை வெளிக்கிளப்பக்கூடியதும், மெய்யான அறிவைத் திறந்துவிடக்கூடியதும்,

உண்மையான அமைதியையும் ஈமானின் இன்பத்தையும் சுவைக்கச் செய்வதும், சிந்தனைக்கும் அறிவிற்கும் எட்டாத விஷயங்களை அறிமுகப்படுத்தி வைத்து மெய்யுடன் தொடர்புகொள்ளச் செய்வதுமே மார்க்கக் கல்வியாகும். கல்வி சத்திய சன்மார்க்க விஷயங்களைப்பற்றியதாகவே இருந்தாலும் முயற்சியும் சிரமமுமின்றிப் பேச்சுக்கள் எழுத்துக்கள் மூலம் கிடைத்துவிட்டால், அது வெறும் சந்தேகங்களை எழுப்பக்கூடியதும் சத்தியத்திற்குத் திரையிடுவதுமான கல்வியாகவே இருக்கும். இதனையே பெரியோர்கள்

اَلْعِلْمُ اَلْحِجَابُ الْاَكْبَرُ

'கல்வியானது பெருந்திரையாகும்' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்விதக் கல்வியே அல்லாஹ்வின் வழியில் செல்லவிடாது தடுக்கும் மாபெருந் தடைப் பரணாகும்."

தீனுக்குத் தொண்டுபுரியாதிருப்பது தற்கொலைக்கு ஒப்பாகும்.

தீனின் முக்கியத்தேவையான அறிவைப் பெறுவதும், தீனின் போதனைகளை ஏனையவருக்கு எடுத்தோதுவதும், நன்மையை ஏவித் தீமையை அகற்றுவதும் தீனின் வளர்ச்சி,எழுச்சிக்காக முயற்சிசெய்து கொண்டிருப்பதும் ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்வின் ஓர் பகுதியும் கடமையுமாகும் என திருகுர்ஆன் மூலமும் நபிகள்கோனின் நன்மொழிகளின் மூலமும் தெளிவுபட விளங்குகிறது. நபிகள் பெருமான் ஸல் அவர்களது காலத்திலே உழுபவர், வர்த்தகர், ஏழை,

செல்வந்தர், அறியாதார், அறிந்தவர் எவராயினும் முஸ்லிம் எனப்படும் அனைவரும் தீனைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காகவும் தீனின் தொண்டிற்காகவும் தங்கள் கடமையெனக் கருதிச் சிறிது நேரத்தையேனும் செலவு செய்துகொண்டிருந்தனர். அவகாசமுள்ள நேரங்களில் தம் ஜீவனோபாயக் காரியங்களிலும் வாழ்க்கைக்குரிய சாதனங்களைச் சம்பாதித்துக் கொள்வதிலும் ஈடுபடுவர். ஆனால் தீனின் தேவைக்குரிய நேரங்களில் சர்வ வேலைகளையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு அதில் ஈடுபடுவதை அதிமுக்கியமாகக் கைக்கொண்டிருந்தார்கள். தீனின் தேவைகளிலீடுபடாது பின்தங்கித் தமது சொந்த வேலைகளில் முனைந்திருப்பவர்களை வன்மையாக எச்சரிக்கும் வசனங்கள் சூரேதௌபாவில் நிரம்பியுள்ளன.

தபூக் யுத்தகளத்தில் கலந்துகொள்ளாத ஒரே குற்றத்திற்காக ஹஜ்றத் கஃபிப்னு மாலிக்ரலி அவர்கள் எத்தனை இன்னல்கள் அடைய நேரிட்டது. கஃபின் கவிதைகளால் களிப்புற்ற மதீனா அவர்களைக் கடுகடுப்புடன் நோக்கியது. கஃபிற்கு இன்பமூட்டும் மலர்க்காடாய் இருந்த மதீனா துன்பமூட்டும் முட்காடாய்ச் சமைந்தது. மார்போடு மார்பாய்த் தழுவிய நேசர்களெல்லாம் மருண்டு மருண்டு நோக்கலாயினர். மக்களினம் நிறைந்த மாமதீனாவிலே அவருடன் முகங்கொடுத்துப் பேசுபவர்கள், அவரது முறையீட்டுக்குப் பதிலுரைப்பவர்கள் எவருமில்லாதிருந்தனர். ஏன்? தீனின் முன்னேற்றத்திற்கு முயற்சிப்பதில் பின்வாங்கியதற்காக! இது முந்தைய முஸ்லிம்களின் பண்பு! ஆனால் இன்றைய நிலையோ?

தவருன எண்ணம்.

"தீனைக் கற்பதும் தீனுக்குப் பணிபுரிவதும் தனித்தனியே ஒவ்வொரு முஸ்லிமினது வாழ்வின் ஒரு பகுதியும் கடமையும் அன்று; அது கூட்டு முறைப்படி சமுதாயம் செய்யவேண்டிய பணிகளில் ஒன்று. அதைக் கற்றுத் தெரிந்து உழைப்பவர் ஒரு சாரார் ஏழை எளியவர் கதீபின் பரம்பரையினரே அதைக் கற்றுத் தெளியவேண்டும். பணம்படைத்தோரும் அவர்தம் மக்களும் ஆங்கிலம் கற்ருேரும் தீனைக்கற்பது மகா கொடிய குற்றம்" என்றதொரு தவருன தாழ்ந்த எண்ணம் நம்மிடையே ஊசலாடி வருவது கண்கூடு. ஆனல் முஸ்லிம்களைப் பற்றிச் சிலாகித்து குர்ஆன் மஜீது கூறுவதாவது:-

وَالْمُؤْمِنُونَ وَالْمُؤْمِنَاتُ بَعْضُهُمْ أَوْلِيَاءُ

بَعْضٍ يَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ

وَيُقِيمُونَ الصَّلٰوةَ وَيُؤْتُونَ الزَّكٰوةَ وَيُطِيعُونَ اللهَ

وَرَسُولَهُ ○

" ஈமான்கொண்ட ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்ருேருக்கு உதவியாளர்களாவர்; நன்மைசெய்யும்படி ஏவுவர்; தீமையை விலக்குவர்; தொழுகையை நிலைநாட்டுவர்; ஏழைவரி (ஜக்காத்) அளிப்பர்; அல்லாஹ்விற்கும் அவனது றசூலுக்கும் வழிப்படுவர்"
(சூரே தௌபா)

இவ்விடத்தில் முஸ்லிம்களை ஈமான் என்ற இலட்சணத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளதால், இப்பணிகளெல்லாம் முஃமின்களின் பொதுவான வேலை என்பது புலனாகிறது.

ஆனால் மேலே குறிப்பிட்ட எண்ணம் முஸ்லிம்களின் வாழ்விலே புகுந்து அவர்களைச் செயல் ஆற்றும் தன்மையை விட்டும் அப்புறப்படுத்திவைத்துள்ளது. அக்காலத்திலுள்ள சஹாபிகளில் எவரும் இவ்விதமாக ஒதுங்கியிருக்கவில்லை. தீனின் அறிவைப் பெறுவதும் தொண்டுபுரிவதும் ஒவ்வொரு முஸ்லிமும் தத்தம் சக்திக்குத் தகுந்தவாறு நிறைவேற்றவேண்டிய கடமையாயிருந்தது. அதிலிருந்து மதீனாவின் வர்த்தகரும் உழவாளியும் தொழிலாளியும் நீக்கப்படவில்லை.

"இஸ்லாத்தின் இஷாஅத் பிரசாரவேலை பெருகிவிட்டது. தொண்டர்கள் அதிகமாகத் தோன்றிவிட்டார்கள். இனி ஜிஹாது செய்யாது, நமது தொழில்களில் கவனஞ்செலுத்துவோம்" என்ற நோக்கத்தோடு அன்ஸாரிகளின் ஒரு குழு உத்திரவு கேட்டபோது "**உங்கள் கரங்களை அழிவில் போட்டுவிடாதீர்கள்**" என்ற இறைவசனம் அருளப்பட்டது. அதாவது தீனின் தொண்டைவிடுத்து அப்புறப்படுவது தற்கொலைக்கு ஒப்பானதாகும் என இவ்வசனம் எச்சரித்தது. யாரை நோக்கி? ஆம்! தீனின் வளர்ச்சிக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த அன்ஸாரிகளின் குழுவை நோக்கி இப்பயங்கரமான எச்சரிக்கை! ஆனால்

நமது குடும்பத்தில் தீன் அழிந்துகொண்டிருக்கிறது; அதைக்கண்டு திருப்தியுற்றுக்கொண்டிருக்கும் நாம் சற்றேனும் நெஞ்சில் கைவைத்துப் பார்க்க வேண்டாமா?

**அக்கறை இருந்தால் தானே?**

"நம்மனைவோராலும் தொழிலுடன் தீனின் கலையையும் கற்க இயலாது; நாம் அனைவரும் தீனின் தொண்டிற்கு அருகதை யுடையவர்களாகவுமில்லை. அப்படியே இத்துறையி லிறங்கிவிட்டால் நமது தொழில் வேலைகளையெல்லாம் ஒரேயடியாக ஒதுக்கி வைத்துவிட நேரிடும். எல்லா நேரங்களிலும் இதற்காகவே அர்ப்பணமாகிவிட வேண்டும்" என்ற மற்றொரு குறுகிய எண்ணமும் நம்மை முன்னேற விடாது தடுத்துவைத்துள்ளது. இம்முறையில் சர்வத்தையும் தியாகம் செய்துவிட்டு முன்வர உறுதிமிக்கோர்களால் தான் முடியும் என்பது வெளிப்படை.

நமது இவ்வித மனப்பான்மையால் தீனின் அறிவுபெறும் மாணவர்களும் தீனின் தொண்டர்களும் வரவரக் குறைந்து, கிடைப்பதற்கே அரிதாகி விட்டார்கள். தங்கள் வேலைவெட்டிகளிலேயே மூழ்கிக்கிடந்த முஸ்லிம் பொதுமக்கள் அதை விட்டுவிட இயலாது. ஆதரவற்றவர்களாய், தீனின் தொண்டு என்னும் மாபெரும் பாக்கியத்தை அடையாத துர்ப்பாக்கியர்களாய், அத்தொழில் முறைகளிலேயே, உலகப் பிழைப்புக்கு அதுவே வழி என்ற நினைப்பிலேயே காலத்தைக் கடத்தலாயினர். "உலக வாழ்

விலேயே திருப்தியுற்று அதிலேயே நிம்மதியடைந்தார்கள்" என்ற திருகுர்ஆனின் அறிவிப்புக்கு உதாரண புருஷர்களாய்ச் சமைந்து தீனைப்பற்றிய விளக்கமின்றி தீனின் தொண்டிற்குரிய பலாபலன்களை அடையாது வெறுங்கையுடனே சென்றனர்.

ஆனால் கௌரவமிக்க ஸஹாபாக்கள் ஒருபுறம் தீனின் தொண்டிற்கும் அறிவிற்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்கள்; பிறிதொருபுறம் அவர்களது தொழில்முறை நடந்துகொண்டிருந்தது. அவர்களிலே பெரும் வர்த்தகர்கள் இருந்தார்கள்; உழுபவர்களும் தொழிலாளர்களும் இருக்கத்தான் செய்தார்கள்; எனினும் அவர்கள் கல்விகற்காது தீனிற்குத் தொண்டுபுரியாது வெறுமனே காலந்தள்ளவில்லை.

குறிப்பாக அவர்களுள் பகலில் தொழிலோ வர்த்தகமோ செய்பவர்கள் இரவிலே சென்று கற்பார்கள். அனஸிப்னு மாலிக்ரலி அறிவிப்பதாவது:- றசூலுல்லாஹ்ஸல் அவர்களது காலத்தில் 'காரீகள்' என்றழைக்கப்பட்ட உங்களது சகோதரர்களின் நிலையை விளக்கட்டுமா? அவர்கள் எழுபது நபர்கள் இரவில் மதீனாவிலுள்ள தங்கள் உபாத்தியாயரிடம் (ஸ-ப்ஹ-)அதிகாலை வரையிலும் படித்துக்கொண்டிருப்பர். காலையில் அவர்களில் பலமிக்கவர்கள் குடிதண்ணீர் பிடித்துக்கொண்டுவருவர்; கூலிவேலை செய்வர்; விறகு வெட்டிக்கொண்டுவந்து விற்பர். சற்று சௌகரியமுள்ளவர்கள் ஒன்றுகூடி ஆட்டை வாங்கி அறுத்துத்துப்புரவுசெய்து றசூலுல்லாஹ்ஸல்

அவர்களது அறைக்கருகே தொங்கவிட்டிருப்பார்கள். (முஸ்னத் அஹ்மதிப்னு ஹன்பல்) அவர்கள் தீனைக் கற்றுக்கொள்ளும் விஷயத்தில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார்கள். சிலரால் அனுதினமும் நபி ஸல் அவர்களது சபைக்கு வர இயலவில்லை யெனின் முறைவைத்து வருவார்கள். தாங்கள் போகாத நாட்களில் நிகழ்ந்த விஷயங்களைத் தங்கள் சகோதரர்களின் மூலம் தெரிந்துகொள்வர். போக இயலாத தினத்தன்று அதிருப்தியுடன் வேலையிலீடு பட்டுக்கொண்டிருப்பர். அவர்களது கரங்கள் வேலை செய்துகொண்டிருக்கும்; உள்ளமெல்லாம் அங்கே என்ன நிகழ்ந்ததோ என்பதை அறிய ஆவல் கொண்டிருக்கும்.

ஹஜ்ரத் உமர் றலி கூறுகிறார்கள்:- "நானும் எனது அண்டைவீட்டுத் தோழரும் 'பனீ உமையா பின் ஜைது' என்ற மதீனாவிற்கு ஓரத்திலிருந்த மஹல்லாவில் குடியிருந்தோம். நாங்களிருவரும் முறைவைத்துக்கொண்டு பெருமானார் ஸல் அவர்களது சபைக்குச் செல்வோம். ஒருநாள் அவர் செல்வார். மறுநாள் நான் செல்வேன். நான் சென்ற தினத்தின் கட்டளைகளையும் மற்றச் செய்திகளையும் அவருக்கு நான் அறிவித்துவிடுவேன். அவர் சென்ற தினத்தின் நிகழ்ச்சிகள் கட்டளைகளை யெல்லாம் அவர் எனக்கு அறிவித்துவிடுவார்." (ஸஹீஹுல் புகாரீ).

## வேலைத் திட்டம்.

1. இன்று நம் சமூகத்திற்குவேண்டிய இன்றியமையாத தேவை யாதெனில், தீனைக் கற்கும் விஷயத்தில்

திருநபியவர்கள் வகுத்த இயற்கையான முறைக்கு மீண்டும் புத்துயிரளிப்பதாகும். ஏட்டின் எழுத்தோவியங்களுடன் உயிருள்ள ஆத்மாக்களின் மூலம் பயன்பெறுவதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது மிகமிக எளியதும் பொதுவானதுமான போதனுமுறையாகும். ஸ்திரமான தீனின் ஸ்தாபனங்களுக்கும் இஸ்லாமியப் போதனைச்சாலைகளுக்கும் கீழ், சில நடந்துதிரியும் மத்ரஸாக்களும், ஓடியாடும் ஆசிரமங்களும், பேசும் புஸ்தகங்களும் இருக்க வேண்டும். அவை மார்க்கக் கல்வியால் நிறம்பிய மத்ரஸாக்கள் என்னும் சமுத்திரங்களிலிருந்து நீர்ப்பையை நிரப்பிநிரப்பி, பொதுவாழ்க்கையில் நசிந்துபோனவர்களிடத்திலே, வர்த்தகர்களின் வர்த்தகங்களிலே, விவசாயிகளின் விவசாயங்களிலே, தொழிலாளர்களின் தொழில்களிலே, அந்த தீனின் ஜீவாமிர்தத்தைப் பாய்ச்சவேண்டும்.

2. தீனுக்காக எடுத்துக்கொள்ளும் அனுஷ்டானப் பிரயாசையும், மார்க்கக் கல்விக்காக யாத்திரை செய்யும் வழக்கமும், பல்லாண்டுகளாகக் கைவிடப்பட்டுவிட்டன. அவைகளுக்கு மீண்டும் உயிரூட்ட வேண்டும். இதுவே இஸ்லாத்தின் இயற்கையான முறையாகும். மார்க்கக் கல்விக்குரிய ஏற்பாடும் இதுதான்.

3 தீனைக் கற்பது, கற்பிப்பது, தீனுக்குத் தொண்டு புரிவது என்ற இப்பணிகளை முஸ்லிம்களது வாழ்க்கையின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக அமைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். முஸ்லிம்கள் தங்களது ஜீவனோபாயங்களையும், தொழில்களையும், "நான் ஜின், மனுவர்க்கத்தினரை என்னை வணங்குவதற்கேயல்லாமல்

படைக்கவில்லை" (குர்ஆன்) என்ற அல்லாஹ்வின் அறிவிப்பிற்கேற்ப அமைத்துக்கொள்ளவேண்டும்; மெய்யான வாழ்க்கைமுறை இதுவே. "மக்களுக்(குப் பயனளிப்பதற்)காக எழுப்பப்பட்டவர்களில் நீங்கள் சிறந்த சமூகத்தினராயிருக்கின்றீர்கள்; நீங்கள் நன்மைசெய்யும்படி ஏவுகின்றீர்கள்; இன்னும் தீமையை விட்டு விலக்குகின்றீர்கள்; மேலும் அல்லாஹ்வைப் பரிபூரணமாக நம்புகின்றீர்கள்" (குர்ஆன்) என்ற தெளிவுரைக்கேற்ப, முஸ்லிம் இதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டான் என்பதை உணர்த்தி அழைப்புக்கொடுக்க வேண்டும். இப்புனிதப் பணிக்குப்பின் எஞ்சும் நேரங்களை சுகபோகங்களிலும் வீண் விஷயங்களிலும் கழிக்காமல் ஜீவனோபாயக்காரியங்களிற் கழிக்க வேண்டும்.

إِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُؤْمِنَ الْمُحْتَرِفَ

"மெய்யாகவே அல்லாஹ் சம்பாதிக்கும் விசுவாசியை விரும்புகிறான்" (ஹதீது)

4. மக்கள் தங்களது சூழ்நிலைகளிலும் தொழில் வேலைகளிலும் சிக்கித் தவித்துக்கொள்வதுடனே தீனைக் கற்றுத் தெரிந்துகொள்வதற்காக, சந்தர்ப்பத்தையும் வசதியையும் உண்டுபண்ணிக்கொள்ளப் பொதுவாக அவர்களால் முடிவதில்லை. எனவே அவர்களைச் சில நாட்களுக்காவது ஊரைவிட்டு வெளிக் கிளம்பும்படி தூண்ட வேண்டும். அதிலே அவர்கள் சிலகாலம் ஒருமுகப்பட்டு, உள்ளத்தெளிவுடன் தீனைக் கற்றுக்கொள்ளவேண்டும். மார்க்கப்

பெரியோர்களிடத்துக்கலந்துறவாடி பணிவிடைகள் புரிந்து பயனடைந்துகொள்ள வேண்டும். ஷரீஅத்தின் ஒரு கட்டுக்கோப்பின் கீழும் தீனிய்யத்தான வாழ்க்கையிலும் இருப்பதின் பழக்கம் அவர்களிடையே பிறந்துவிடவேண்டும். அவர்கள் தமக்காகத் தங்களின் நண்பர்கள் மூலம் ஒரு சரியான சன்மார்க்கச் சூழ்நிலையை உற்பத்திசெய்துகொள்ள வேண்டும். அவர்களின் இந்த வெளியேற்றம் அவர்கள் தமக்கும் தமது சகோதரர்களுக்கும் பயனளிப்பதாயும் படிப்பினை மிக்கதாயும் புத்துயிரூட்டக் கூடியதாயும் சமைதல் வேண்டும்.

இப்பரந்த நோக்கமும் உஸூல்களும் அமைந்த இந்தத் திட்டத்தின் கீழ், மௌலானா முஹம்மது இல்யாஸ்ரஹ் அவர்கள், முஸ்லிம்களில் ஒவ்வொரு சாராரும் தீனைக் கற்பதற்காகவும் கற்பிப்பதற்காகவும் தம் நாட்டையும் வீட்டையும் விட்டு வெளிக்கிளம்பும்படியும், குறிப்பிட்டதொரு கட்டுக்கோப்பின் கீழ் (ஸபர்) பிரயாணம் செய்யும்படியும் ஆர்வமூட்டி அழைப்புக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இந்த நோக்கத்தை ஒரு கடிதத்தில் மௌலானா அவர்கள் தெளிவுபடுத்துவது வருமாறு:-

"தீனின் விஷயத்திற்காக ஜமாஅத்துக்களைச் சேகரித்து அனுப்புவிக்கும் வழக்கத்தை நாம் கைவிட்டுவிட்டோம்; ஆனால் அடிப்படையான விஷயம் இதுதான். நபிபெருமான் ஸல் அவர்கள் தாமே சுற்றித்திரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களது கரங்களைப் பிடித்துக் கலிமாச் சொன்னவர்களும்

பைத்தியக்காரர்களே போன்று சுற்றியலைந்து கொண்டிருந்தார்கள். (இஸ்லாமிய ஆரம்பகாலத்தில்) மக்காவிலே முஸ்லிம்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணுமளவு இருந்தது. ஒவ்வொருவரும் இஸ்லாத்தை ஏற்றதன் பின் தன்னந்தனியே சென்று மற்றவரிடத்துக் கடமையை உணர்த்தும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். மதீனாவிலே கூட்டு முறைப்படியுள்ள தேசிய வாழ்க்கை துவங்கியவுடன், அங்கே சென்றடைந்த பெருமானார் நாலுபாகங்களிலும் ஜமாஅத்துகளை அனுப்பத் துவங்கிவிட்டார்கள். அதிகப்படியாகச் சென்றவர்கள் போர்வீரர்களாய்ச் சென்றார்கள். சுற்றித் திரிந்தவர்களுக்கு மட்டுமே நிம்மதியான வாழ்க்கை கிடைத்திருந்தது. அதாவது நாட்டைச் சுற்றுவதும் தீனுக்காகத் தொண்டுபுரிவதும் அதற்காகப் பிரயாணம் செய்வதுமே பிரதானமான வேலையாயிருந்தது. என்று இப்பழக்கம் கைவிடப்பட்டதோ அன்றே 'கிலாபத்' பறிபோயிற்று."

வெளிக்கிளம்பிச் செல்லும் காலத்தில் என்ன நிகழும்? எதன்பால் அழைப்புக் கொடுக்கவேண்டும்? இதனையும் மௌலானா தாமே விளக்குகிறார்கள்:—

"இந்த தப்லீக் இரு விஷயங்களைக் கொண்டது; மற்றவை அதன்முறையும் தஷ்கீலுமாகும். அவ்விரு விஷயங்களில் ஒன்று சரீர சம்பந்தமானது; மற்றொன்று ஆத்மிக சம்பந்தமானது. சரீர சம்பந்தமானது என்பதன் கருத்து, உறுப்புக்கள் சம்பந்தப்பட்ட செயல்களாகும்; அதாவது நபிபெருமானவர்கள் கொணர்ந்த விஷயங்களைப் பரத்துவதற்

காக, நாடுநாடாக தேசம்தேசமாக ஜமாஅத்துகளை அனுப்பும் சுன்னத்திற்குப் புத்துயிரளித்து நிலைத்திருக்கச்செய்வதாகும். ஆத்மிகசம்பந்தப்பட்டது என்பதன் கருத்து, உத்வேகத் தப்லீகாகும்; அதாவது அல்லாஹுதஆலாவின் கட்டளைக்காக உயிர் துறக்கப் பழக்குவதாகும். இதைத்தான் இந்த ஆயத்துகளில் கூறப்படுகிறது. "உமது இறைவன் மீது சத்தியமாக,இவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில், உம்மை நீதிபதியாக அங்கீகரித்து, நீர் செய்யும் தீர்ப்பை தங்கள் மனத்தில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலும் அங்கீகரிக்காத வரையில், அவர்கள் உண்மை விசுவாசிகளாகமாட்டார்கள்"(4.65). "நான் ஜின், மனுவர்க்கத்தினரை என்னை வணங்குவதற்கேயல்லாமல் படைக்கவில்லை" (அல் குர்ஆன்). அதாவது அல்லாஹ்வின் ஆக்ஞையின் மீது உயிரை ஒரு பொருட்டாகக் கருதாது சிரம்பணிந்துவிடுவதாகும்.

## ஆறு அம்சங்கள்.

1. தப்லீகிற்காகப் புறப்பட்டுச் செல்லுங்காலத்தில்,நபிபெருமானார் கொணர்ந்த விஷயங்களில் எது எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கின்றதோ அதில் அந்த அளவு முயற்சிக்கவேண்டும். இன்று நாம் துரதிருஷ்டவசமாகக் கலிமாவைக் கூடச் சரிவரப் புரிந்துகொள்ளாத நிலையில் இருக்கின்றோம். எனவே முதன்மையாக இதே கலிமா தய்யிபாவின் தப்லீக் செய்யவேண்டும். கலிமாதான் இறைவனின் தெய்வத் தன்மையை ஏற்றுச் செய்து

கொடுக்கும் பிரமாணப் பத்திரமாகும். அதாவது அல்லாஹ்வின் ஆக்ஞையின் மீது உயிர் துறப்ப தைத் தவிர்த்து உண்மையில் வேறு வேலை எங்களுக் குக் கிடையாது (என்று நாம் கலிமாவின் மூலம் உறுதியளிக்கின்றோம்).

2. சரிவரத் தொழுதல்: கலிமாவின் வார்த்தைகளின் கருத்தை உணர்வதைச் சீர்திருத்திக் கொண்டதன் பின்னர், தொழுகையினுள் அமைந்துள்ள விஷயங் களைச் சீர்திருத்தி, தொழுகைகளை நபி பெருமானா ரவர்களது தொழுகையைப் போன்று தொழும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

3. இல்மு, திக்று: மூன்று நேரங்களில், அதாவது காலை, மாலை, இரவில், சிறிது நேரம் தனது தகுதிக் குத் தக்கவாறு மார்க்கக் கல்வி கற்றுக்கொள்வதி லும் திக்று தியானம் செய்துகொள்வதிலும் ஈடுபட வேண்டும்.

4 இவ்விஷயங்களைப் பரத்துவதற்காக, முஹம் மது ஸல் அவர்களுக்கு இடப்பட்ட முதற் பெருங் கடமை என மதித்து, நாடு நாடாகச் சுற்றுப் பிர யாணஞ் செய்யும் வழக்கத்தை நடைமுறையில் கொண்டுவர வேண்டும்.

5. இவ்வாறு செல்லுங்காலத்தில், இப்பிரயாணம் சற்குண வொழுக்கத்தைப் பழகிக்கொள்வதற்காக என்று நிய்யத்துச் செய்துகொள்ளவேண்டும். கட மைகளை நிறைவேற்றுவதில் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். அக்கடமைகள் சிருஷ்டிகர்த்தா சம்பந் தப்பட்டவைகளாயிருப்பினும் சரி; அல்லது சிருஷ் டிகள் சம்பந்தப்பட்டவைகளாயிருப்பினும் சரியே.

ஏனென்றால் ஒவ்வொருவரிடத்தும் அவரவரைப் பற்றியேதான் கேள்வி கணக்குக் கேட்கப்படும்.

6. தூய எண்ணம்: ஒவ்வொரு செயல்களைப் பற்றிய அல்லாஹ்வின் வாக்குறுதிகளையும் எச்சரிக்கைகளையும் கவனித்து, அதற்கேற்ப அமல்செய்வதின் மூலம், அல்லாஹ்வின் திருவுளப்பொருத்தத்தை அடைந்து கொள்வதற்கும் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக்கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும்.

தீனைக் கற்பதற்காகவும் அல்லாஹ் ரசூலின் விஷயங்களை மற்றவர்களுக்கு எடுத்தோதிப் பரத்துவதற்காகவும் செல்லும் இப்பிரயாணம், சில இன்ப சுகானுபவங்களின் இடைக்கால இப்பிரிவு, பழக்க வழக்கத்தின் இலேசான இம்மாற்றம், தீனுக்காகப் புரியும் சிறு தியாகத் தொண்டாகும். இத்தியாகம் புரியாமல் தீனின் பலாபலன்களையும் அபிவிருத்திகளையும் பெறுவது கஷ்டமே. இது இணையற்ற அருட்கொடையான இஸ்லாத்திற்கு நன்றி செலுத்தும் எளிய மார்க்கமாகும். "எந்த சன்மார்க்கத்திற்காக ஆயிரக்கணக்கான உயிர்களை மனமுவந்து அர்ப்பணித்து விடுவது அதன் மதிப்பீட்டிற்கு ஈடாக முடியாதோ, எந்த சன்மார்க்கத்தின் சரியானவிலை உள்ளத் துடிப்பும் உதிரத்தியாகமுமாக இருந்ததோ, அந்த சன்மார்க்கத்திற்காக, இப்பொழுது நாம் தப்லீகுக்காக வெறுமனே நடந்து சஞ்சாரம் செய்வதும் அற்ப சிரமம் எடுத்துக்கொள்வதும் நாம் மெய்யாகச் செலுத்தவேண்டிய கடமைக்கு ஒரு சிறிதும் ஈடாகாது. எனினும் இதே அணுப்பிரமாணமுள்ள முயற்சிக்கு 'கடைசிகால

மக்களுக்கு அவர்கள் புரியும் தொண்டிற்காக ஐம்பது ஸஹாபியர்களுக்குச்சமமாக நன்மைகிடைக்கும்' (ஹதீது) என்பது போன்ற சந்தோஷச் செய்திகளும், சத்திய வாக்குறுதிகளும், "அல்லாஹ் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்குமேல் சிரமப்படுத்துவதில்லை" (குர்ஆன்) என்பது போன்ற இறைவன் வாக்கான நற்செய்திகளும் நமது இம்முயற்சி விஷயத்தில் நமக்குப் பெரிதும் நம்பிக்கையூட்டிக்கொண் டிருக்கின்றன." *

மௌலானா இல்யாஸ் ரஹ் தப்லீகுக்குச் சென்றிருந்த ஒருவருக்குக் காய்ச்சல் வந்துவிட்டதாகக் கேள்வியுற்று எழுதிய கடிதம் வருமாறு:-

"இந்தப் பதினான்காம் நூற்றாண்டில், அல்லாஹ்வின் பாதையில் தொண்டுபுரிவதற்குச்செய்த யாத்திரை நோய்க்குக் காரணமானதற்காக சோபனங்கூற என் உள்ளம் தூண்டுகிறது. 'ஒரு சிறுவிரல்தான்; அது இரத்தத்தில் தோய்ந்துவிட்டது; அல்லாஹ்வின் பாதையில் இது நிகழ்ந்தது பிரமாதமான விஷயமல்ல (ஹதீதின் விளக்கம்). பார்வையளவில் உலகிலே ஆயிரக்கணக்கான நபர்களுக்குக் காய்ச்சல் வருவதுபோல் உமக்கு ஒருவருக்கும் வந்துவிட்டது; இவ்வளவுதான். கேவலம் ஒரு ரொட்டித் துண்டுக்காக உயிர்கள் பறிபோய்க்கொண்டிருக்கும் இக்காலத்தில் சன்மார்க்கத்திற்காகச் செய்யும் முயற்சியில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டது, ஒரு பிரமாதமான விஷயமல்ல. ஆனால் ஒரு விஷயத்தைக் கவனிக்குமிடத்து இந்தக் காய்ச்சல் இப்புனித பூமியிலே என்றுமே நிகரற்றதாய் நின்றிலங்கும். எந்த

---

★ மௌலானா அவர்களின் கடிதம்.

நோக்கத்திற்காக அடியெடுத்துவைக்கப்பட்டதோ அந்த நோக்கம்-வாழ்க்கை முறை நடைமுறையில் சித்தியாகிவிடுமானுல், உயிர்களை அர்ப்பணித்தாவது அவ்வழி திறந்துவிடுமானுல், அது இஸ்லாமிய சமூகத்திலே உலகபோக அலுவல்களில் மூழ்கி அவற்றிலிருந்து சற்றும் விலகமுடியாமல் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு சன்மார்க்க நெறி பற்றி நேர்வழியடைவதற்குரிய சந்தர்ப்பத்தை அளிப்பதும் மறைந்துபோனதுமாகிய முறைக்கு புத்துயிரளித்துவிட்டதற்குச் சமமாகும்"

## அழுதபிள்ளை பால் குடிக்கும்......?

கடந்தகால சமுதாயத்தினரது போதனமுறைக்கு மாருக தற்பொழுது போதனை பிரசார முறையிலே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அழுதபிள்ளை பால்குடிக்கும் என்ற முதுமொழிக்கேற்பத் தேடித் திரிபவர்களுக்கே போதனை, சீர்திருத்தத்தின் முழு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறதேயன்றி, நோயின் உணர்வுகூட இல்லாது திருப்தியுடன் வீற்றிருப்போரைத் தூண்ட எந்தவித ஏற்பாடும் இல்லாதிருக்கிறது. ஆனுல் முக்கியமாகக் கவனஞ் செலுத்தப்படவேண்டியவர்கள் இவர்களேயாவர். நபிமார்கள் அனுப்பப்பட்ட காலங்களிலே உலகமனைத்தும் ஒதுங்கிக் கிஞ்சித்தும் அக்கறையில்லாது வீற்றிருந்தபொழுது, அத்தீர்க்கதரிசிகள் அம்மக்களிலேயே தீனைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வமுள்ளோரையும் தீனுக்காக சர்வத்தையும் அர்ப்பணிக்கும் பண்புள்ளோர்களையும் தோற்றுவித்தார்கள்; உண்மையில் தீனைப்

பற்றிய அக்கறை ஆர்வமில்லாதோரிடையே அக்கறையையும் ஆர்வத்தையும் தோற்றுவிப்பதற்குப் பெயரே தப்லீக் ஆகும்.

இமாம் கஸ்ஸாலி றஹ் அவர்கள் இஹ்யா உலுமுத்தீன் என்ற நூலிலே இவ்விஷயத்தைப் பற்றித் தெளிவாக எழுதுகையில் குறிப்பிடுவதாது:-

"ஒருவன் தான் புரியும் செயல் பாவமானது என அறியாமல் அதைச் செய்ய முற்படுவானுகில் அதைப் பற்றி எச்சரிக்கை செய்வது ஆலிமின்-அறிந்தோரின்-கடமையாகும். அதற்குரிய முறையாதெனில், ஒவ்வொரு ஆலிமும் ஒவ்வொரு பகுதி அல்லது மஹல்லா அல்லது மஸ்ஜிது அல்லது சபையின் பொறுப்பேற்றுக் கொண்டு, அங்குள்ள மக்களுக்கு தீனைப் பற்றிப் போதிக்கவேண்டும்; அவர்களுக்குத் தீயதையும் நன்மை பயக்கத் தக்கதையும், வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் உரிய விஷயங்களையும் தெளிவுபட விளக்கியுரைக்க வேண்டும். அவர்கள் தாமேவந்து கேட்கவேண்டுமென எதிர்பார்க்காது, அவர்களைத் தனது வழியின்பால் அழைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் உலமாக்கள் நபிமார்களின் வார்சுகளாவர்; மக்களை நபிமார்கள் அறியாமையில் விட்டுச் சென்ருர்களில்லை; மக்களை அவர்கள் அறைகூவி அழைத்துக்கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் அவர்கள் தாமே தலைவாயல் தலைவாயலாகச் சென்று ஒவ்வொருவராகத் தேடித் திரிந்தார்கள்; மேலும் அவர்களை நேரிய வழியின்பால் ஈர்த்துக்கொண்டிருந்தார்கள்; ஏனெனில் ஆத்மிக நோயால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள்

நோயைப் பற்றி அறியமாட்டார்கள். ஒரு உதாரணம் கூறுகிறேன்:- ஒருவனது முகத்தில் வெண்குஷ்டம் இருக்கிறது; அவனிடத்தில் கண்ணாடியுமில்லை. எதுவரை அவனுக்கு மற்றவர் விஷயத்தை விளக்கவில்லையோ அதுவரை அவன் விஷயந் தெரியாமலே இருப்பான். எனவே ஒவ்வொரு ஊர் ஒவ்வொரு மஹல்லாவிலும் மக்களுக்கு தீனைப் பற்றி போதிக்கும் தகுதிவாய்ந்த மதப் பற்றுள்ள ஆலிமை நியமிப்பது உலமாக்களுடையவும் இஸ்லாமிய அரசர்களுடையவும் கடமையாகும்; (அரசர்கள் இல்லாத இடத்தில் சமூக செல்வந்தர் கடமையாகும்). மக்களனைவரும் அறியாதவராகவே பிறப்பதால் அவர்களை தீனின்பால் அழைத்து தப்லீக் செய்வது மிகமிக அவசியமாகும். உலகம் நோயாளிகளின் வீடு; பூமிக்கு அடியில் பிணங்கள் உள்ளன. பூமிக்கு மேலே சரீர நோயாளிகளைவிட ஆத்மிக நோயாளிகள் அதிகமாயுள்ளனர்.''

### ஆர்வமூட்ட வேண்டும்.

தற்பொழுது நாம் செய்யவேண்டிய மிக முக்கியமான தப்லீக் யாதெனில், முஸ்லிம்களிடையே 'நாம் முஸ்லிம்களாக இருக்கின்றோம்' என்ற உணர்வையும், 'கற்றலன்றி தீனைப் பற்றித் தெரியமுடியாது; உலகத் தொழில்களைவிட முக்கியமாக இதைக் கற்பது அவசியம்' என்ற மனப்பான்மையையும் தோற்றுவித்தல் வேண்டும். முஸ்லிம்களிடையே இந்த உணர்வும் ஆர்வமும் ஏற்பட்டுவிட்டால் மற்றப் பிரச்சினைகளெல்லாம் எளிதில் தீர்ந்துவிடும். இன்று

முஸ்லிம்களை வாட்டிவரும் பொதுவான நோய் உணர்வின்மையும் ஆர்வமின்மையுமேயாகும். ஈமானை மறுபடியும் புதுப்பிக்க வேண்டியதிருக்க, நம்மில் ஈமானிருக்கிறது என்றும் இனிவேறு விஷயங்களில் கவனஞ் செலுத்துதல் வேண்டுமென்றும் நினைப்பது பெருந்தவறாகும். நமது முந்தைய முஸ்லிம் பெரியார்களது முயற்சியின் பயனால் பிறந்த தீனின் உணர்வும் ஆர்வமுமே கடந்த நூற்றாண்டுகளில் கிட்டிய இஸ்லாமிய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாகும். இக்காலத்தில்கூட நம் கண்முன் தென்படும் மதப்பற்றுக்கும் தீனின் காட்சிகளுக்கும் இந்த உணர்வும் ஆர்வமுமே காரணம் என்று சொல்லவேண்டும். அண்ணல் நபி ஸல் அவர்களின் அரும்பெரும் முயற்சியாலும், ஸஹாபாக்களின் தியாகம், தப்லீகாலும், முஸ்லிம்களது கரங்களில் கிட்டிய முதலீடு பன்னூறாண்டுகளாகச் செலவழிந்து கொண்டிருக்கிறதேயன்றி, மேலும் முதலீடு சேர்ப்பதற்கான முயற்சி பல நூற்றாண்டுகளாகவே தடைப்பட்டுவிட்டது. இவ்வாறே இம்முதலீடு செலவழிந்துகொண்டிருந்தால் அது முற்றிலும்செலவாகி முஸ்லிம்களின் உடலில் உயிரில்லாதுபோய்விடுமோ என்ற பீதியும் அச்சமும் அதிகரிக்கின்றது.

தற்பொழுது முஸ்லிம்களிடையே சிறிதேனும் தீனைப் பற்றிய உணர்வும் ஆர்வமும் இருப்பதால் தான், இன்னும் மத்ரஸாக்களுக்கு மாணவர்களும் மஸ்ஜிதுகளுககுத் தொழுகையாளிகளும் வருகிறார்கள். இந்த அரை குறை ஆர்வமும் உணர்வும் நாளடைவில் மறைந்துவிட்டால், மத்ரஸாக்கள் தூங்கிக்

கொண்டும் மஸ்ஜிதுகள் வெறுமனே காட்சியளித்துக் கொண்டுமிருக்கும்படி நேரிடும். முஸ்லிம்களிடையே உணர்ச்சி குன்றிக்கொண்டே செல்வதின் அடையாளங்கள் தெளிவாகத் தென்படுவதால் பெரும் பீதி ஏற்படுகிறது.

எனவே பண்டைய முதலீட்டுடன் மேலும் மேலும் சேர்ப்பதிலும் அதைப் பாதுகாப்பதிலும் ஒவ்வொரு முஸ்லிமும் பெரிதும் அக்கறை கொள்ள வேண்டும். தீனின் சபைகளும் இயக்கங்களும் மத்ரஸாக்களுக்கும் மஸ்ஜிதுகளுக்கும் ஆட்கள் கிடைக்கின்றார்கள் என நினைத்து நிம்மதியுடன் இருக்கக் கூடாது. பெரும் ஆருகவே இருந்தாலும் தண்ணீர் செலவழிந்து கொண்டே இருந்தால் என்ருவது ஒரு நாள் அது வற்றவே செய்யுமல்லவா?

கலிமாவைப் பற்றி நாம் புரியும் தப்லீக் என்னவென்ருல், கலிமாவின் கருத்தை விளக்கி, முஸ்லிம்களுக்குள் நாம் முஸ்லிம்கள் என்ற உணர்வை உண்டுபண்ணி, தீனைப்பற்றிய ஆர்வத்தை ஊட்டுவதேயாகும். முஸ்லிம்களிடையே தீனின் உணர்வையும் ஆர்வத்தையும் உண்டுபண்ணுவதற்குரிய வழியாதெனில், அவர்களிடத்தில் கலிமாவைக் கேட்க வேண்டும்; கலிமாவின் பொருளை விளக்கி, இறை வணக்கத்தில் நாம் அவனது ஊழியர்களாய் இருக்கின்ரேம், றசூலைப் பின்பற்றுகின்ரேம் என்ற உறுதிமொழியின் தாத்பரியத்தையும் தெளிவு படுத்த வேண்டும். இதைத் தவிர்த்து வேறு வழி கிடையாது. முஸ்லிம்களிடை இப்பணியைத்

தொடர்ந்து செய்தல்வேண்டும். இன்று நம்மிடையே தீனை அறிந்தவர் ஆயிரம் நபர் என்றால் அறியாதோர் பல்லாயிரவர் இருக்கின்றனர்.

ஏழைகளிடையே தப்லீக்.

பிற்காலவீழ்ச்சியில் சிக்கித்தவித்துவரும் பெருமானாரின் உம்மத்துகளில் ஒரு பெருங்கூட்டத்தினர் அவர்களுடைய வறுமையின் காரணத்தால் இழிவாகக் கருதப்படுகின்றனர். குடிசையில் வாழ்ந்து தரையில் புரளும் அவர்களை மனிதர்களாகக்கூட நாம் பாவிப்பதில்லை. உண்மையில் இஸ்லாமிய முன்னோர்களின் பெருமிதமான தனிப்பட்ட குணங்களும் இலட்சணங்களும் இன்னும் உயிருடன் காட்சியளிப்பது, இந்த ஏழைகளின் மூச்சால்தான் என்பதை நாம் உணருவதில்லை. "நாம் யாரைத் தாழ்ந்தவர்க்கத்தினர் எனக்கருதுகிறோமோ, யார் கிழிந்த அழுக்கு உடை தரித்திருக்கிறார்களோ அவர்கள் தாம் உண்மையில் திருத்தூதரின் சுன்னத்தை,நடையைக் கடைப்பிடித்தவர்களாயிருக்கின்றனர். உலகினில் வறுமையில் வாடிவதங்கிக் கிடப்பதும் இஸ்லாத்தின் இலட்சணத்திலுள்ளதே" என்று மௌலானா முஹம்மது இல்யாஸ் ரஹ் வெகு அழகாக விளக்கியுள்ளார்கள். கிராமங்களிலும் நகரங்களிலும் இவ்வித முஸ்லிம்கள் உள்ளனர். அம்மக்கள் நெடுநாட்களாகவே போதனைச் சீர்திருத்தத்தினுடைய எல்லையை விட்டும் அப்புறப்பட்டுக் கிடக்கின்றனர். அவர்களில் பல் குடும்பத்தினர் பட்டினங்களில் வாழும் முஸ்லிம்களின் கவனமின்

மையால் இஸ்லாத்தை விட்டும் அப்புறப்பட்டு அயலாரின் கரங்களில் சிக்கும் நிலையிலிருக்கின்றனர்; பலர் அப்படியே சிக்கியும் விட்டார்கள்; எனினும் இந்த முஸ்லிம்கள் பெரும்முக்கியம் வாய்ந்தவர்களாயிருக்கின்றனர். ஹஜ்றத் உமர் றலி அவர்கள் தங்கள் ஸ்தானத்திற்கு வருபவருக்கு மரணத் தறுவாயில் உபதேசித்தவைகளில் ஒன்ருவது:- "கிராமங்களில் வாழ்பவர்கள் விஷயத்தில் நன்ருக கவனித்துக் கொள்ளும்படி கலீபாக்களுக்கு உபதேசிக்கின்றேன்; ஏனெனில், அவர்களே அரபியர்களுக்கு அஸலாயும் இஸ்லாத்தின் ஊற்றுக்கண்ணுயு மிருக்கின்றனர்" (புகாரீ). எனவே இந்தத் தப்லீக் இயக்கத்தில் அவர்களைப்பற்றி கவனஞ் செலுத்துவது அதி முக்கியமாகும். அவர்களின் நிலைமை கண்டு ஒவ்வொரு முஸ்லிமும் சஞ்சலப்படவேண்டும்.

"உண்மையான உள்ளத்துடிப்புடன் சிந்தித்துப் பார்த்தால், பருவமடைந்த ஆணுயினும் பெண்ணுயினும் முஸ்லிம்கள் தத்தம் கடமைகளைச் செய்யாது கைவிட்டதாலேயே, அல்லாஹ்வின் முனிவும் கோபமும் இறங்கிக்கொண்டிருக்கிறது என்னும் உண்மை புலப்படும். விதிப்படி எவனேனும் மரணித்து விட்டால், அவன் எதைச் செய்வதற்குத் தகுதிவாய்ந்தவனுயிருந்தானே அதைச் செய்யாததால், அதனுல் கிடைக்கவிருக்கும் பெரும் வேதனையில் அவன் மாட்டிக்கொள்வான் என்பதை நினைத்து ஒவ்வொரு முஸ்லிமும் சஞ்சலப்படுவது அவசியமாகும். இந்நிலையில் மரணம் சம்பவிப்பதால் என்னென்ன அபாயங்கள் நேரிடுமோ அவை கவனிக்கத் தக்கவைகளாம்." (மௌலானுவின் கடிதம்)

இமாம் கஸ்ஸாலி றஹ் அவர்கள் தங்கள் காலத்திலிருந்த இந்த கிராமக் குடிமக்களைப் பற்றியும், இஸ்லாமிய இராஜ்ஜியத்தின் சுற்றுப்புறங்களில் வசிப்பவர்களது மார்க்க கவனமின்மை, மடமை, மறதி ஆகியவை பற்றியும் குறிப்பிடுகிறார்கள். கிராமமக்களிடையே சென்று தப்லீகுக் கடமையை நிறைவேற்றும்படி உலமாக்களையும் நகரவாசிகளான முஸ்லிம்களையும் தூண்டுகிறார்கள்; அது வருமாறு:-

"நகரமக்களில் பெரும்பாலோர் தொழுகையின் ஷர்த்துக்களையும் மார்க்கக் கடமைகளையும் பற்றி அறியாதிருக்கும்போது, குக்கிராமங்களில் வசிப்பவர்களின் நிலை எவ்வாறிருக்கும்? அம்மக்கள் கிராமவாசிகள், 'அக்ருத்', 'குர்மான்' முதலிய பலவகைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். மனிதன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும்போதே ஷரீஅத்தைப் பற்றி அறிந்த ஆலிமாகப் பிறப்பதில்லை. எனவே தப்லீக் செய்வது மார்க்க அறிஞர்களின் மீது கடமையாகும். ஒரு மஸ்அலாவைப் பற்றி அறிந்திருப்பவர் அவ்விஷயத்தில் அவர் ஆலிமாகக் கருதப்படுவார். மெய்யாகவே தீனைப்பற்றி அக்கறைகொண்டுள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்த பணியாகும் சில சமயங்களில் குறுக்கிடும் நுணுக்கமான விஷயங்களையும், மார்க்கக் கல்வியின் ஆழிய கவனத்திற்குரிய விஷயங்களையும் ஆராய்ச்சி செய்வது பர்ளுகிபாயாவாகும். ஆதலின் பர்ளுஐன் விஷயத்திலும், மேற்குறிப்பிட்ட பர்ளு கிபாயாவைக் காட்டிலும் மிக முக்கியமான பர்ளு கிபாயா

விஷயத்திலும் கவனஞ் செலுத்துவதே முதலில் செய்யவேண்டிய வேலையாகும்."

## ஈமானும் இஹ்த்திஸாபும்.

ஹதீதுகளில் அநேக அமல்கள், இபாதத்து களுடன், ஈமானும் இஹ்த்திஸாபும் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"றமலான் நோன்பை ஈமான் இஹ்த்திஸாபுடன் நோற்பவருக்கு அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும்; லைலத்துல்கத்ரு இரவில் ஈமான் இஹ்த்திஸாபுடன் நின்று வணங்குபவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும்"

புகாரி ஷரீபின் இந்த ஹதீதுகளில் றமலான் நோன்புகளையும் லைலத்துல்கத்ரின் தொழுகைகளையும் ஈமான் இஹ்த்திஸாபுடன் நிறைவேற்றினல் முன்னைய சர்வ குற்றங்களும் மன்னிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஈமான்** என்பதின் பொருள், அல்லாஹ் அளித்த வாக்குறுதிகளின் மீது பரிபூரண நம்பிக்கை கொள்வதாகும். ஏகபரம்பொருளாகிய அல்லாஹ் எதில் எந்தத் தன்மைகளை அமைக்க வேண்டுமென விரும்புகின்ருனே அதை அவ்விதம் செய்யும் ஆற்றலுள்ளவன் என்றும், இன்ன அமலில் இன்னின்ன தன்மைகள் அமைந்துள்ளன வென்று ஹஜ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அறிவித்ததினல் நாம் தெரிந்து கொண்டோம் என்றும் உறுதிகொள்வதாகும்.

இஃறத்திஸாப் என்பதின் பொருள், அமல் செய்யும் நேரத்தில் அந்த வாக்குறுதிகளை முன்னிறுத்தி, அதே ஆசையின் மேலீட்டால் அமல் புரிவதாகும். இவ்விரண்டுமே அமல்களின் ஆத்மா; இவைகளே அமல்களில் சக்தியையும் நிறையையும் உற்பத்தி செய்கின்றன. புகாரியின் மற்றொரு ஹதீதில் இந்த ஈமான் இஃறத்திஸாபைப் பற்றித் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.

"அப்துல்லாஹ் இப்னு அம்ரு (றலி) அறிவிக்கிறார்; நபிபெருமானார் (ஸல்) நவின்றருளியதாவது:- "நாற்பது விஷயங்கள் இருக்கின்றன; அவைகளில் மிகவும் சிறிய விஷயம், ஒருவனிடத்தில் ஒரு ஆட்டைப் பிடித்துக் கொடுத்து, அதில் அவன் பால் கறந்து பயனடைந்துகொள்ளும்படி செய்து, அந்த ஆட்டைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாகும். எவரேனும் இவைகளில் ஏதேனுமொரு விஷயத்தை அதன் நன்மைகளை ஆதரவு வைத்துச் செய்வதில் அல்லாஹ் தருவதாக அளித்த வாக்குறுதிகளைப் பரிபூரணமாக நம்பி அமல் செய்தால், நிச்சயமாக அம்மனிதனை அல்லாஹ் சுவர்க்கத்தில் சேர்ப்பான்"

கண்ணியமிக்க ஸஹாபியர்களின் நிலையினைக் கவனிக்குமிடத்து, அவர்கள் இவ்விரு விஷயங்களிலும் பிற்காலத்தவர்களை விடத் தனிச் சிறப்புடன் திகழ்ந்துள்ளார்கள் எனத் தெளிவாகவிளங்குகிறது; இவ்விரு விஷயங்களும் அவர்களது அமல்களின் அந்தஸ்தை மிகவும் உயர்த்தின. அமல், இபாதத்துகளில் ஸஹாபியர்களைக் காட்டினும் பிற்காலத்தவர்கள் முன்னேறியிருப்பினும், ஸஹாபி

யர்களது அமலின் தட்டு நிறுவையில் எடைநிறைந்த தாக இருப்பது ஏன்? எனின், நபி பெருமானா ரவர்களது பேருறவாலும் தோழமையின் சக்தியா லும், ஈமானும் இஹ்த்திஸாபும் அவர்களின் உரிமைப் பொருளாக மாறியிருந்தன. எனவே ஸஹாபியர் கள் உயர்வடைந்தது அதிக அமல்களால் அல்ல; அதிக நன்மையால்தான் என்று அகாயிதின் உலமாக் கள் அறிவித்துள்ளார்கள். ஹஜ்ரத் ஹஸன் பஸரீ (றஹ்) கூறியுள்ளதாவது :—

وَاللهِ مَا كَانُوْا اَكْثَرَ صَلٰوةً وَّلَا صِيَامًا وَّلٰكِنَّهُ

سَيْئٌ وَقَّرَ فِي الْقَلْبِ

"அல்லாஹ்வின் மீது ஆணையாக, ஸஹாபியர்கள் அதிக நபில் தொழுபவராயும் நோன்பு வைப்பவ ராயும் இருக்கவில்லை; ஆனால் அவர்களது உள்ளத் தினுள்ளே ஒரு வஸ்து உறைந்துபோயிருந்தது"

அவ்வஸ்து இந்த ஈமான், இஹ்த்திஸாபாகத் தான் இருக்கவேண்டும். இக்குறிப்பை மௌலானா முஹம்மது இல்யாஸ் (றஹ்) அவர்கள் நல்ல முறை யில் உணர்ந்திருந்தார்கள். அவர்களது இயக்க முழுவதும் இந்த அடிப்படையின் மீதே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு கடிதத்தில் அவர்கள் வரைவதாவது :—

"ஈமான் இஹ்த்திஸாபே ஞான மார்க்கமாகும். எத் தனையோ அமல்களில் 'ஈமானவ் வஇஹ்த்திஸாபன்'

என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமலுக்கும் என்னென்ன நன்மைகள் உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளதோ அவைகளைக் கவனத்தில் வைத்து, அதன் மூலம் அல்லாஹுதஆலாவின் கவுரவத்தையும், அவனது பெருமையையும், அவனது தொடர்பையும், நம்பிக்கையையும் வளர்க்க வேண்டும். அந்த அமல்களுக்காக இம்மையிலும் மறுமையிலும் தருவதாக வாக்களிக்கப்பட்டவைகளைப் பகரம் எனக் கருதாமல் நன்கொடை என உறுதி கொள்வது ஆத்மிகக் கருத்தாகும்"

மற்ருெரு இடத்தில் கூறுகிருர்கள் :—

"அமல்கள் தாமே எவ்வித விலை மதிப்பிற்கும் உரியனவாக இல்லை; அல்லாஹ்வின் கட்டளைகளுக்குச் சிரம் பணிவதாலும் அப்பரம தயாளனுடன் தொடர்பு வைத்துக்கொள்வதாலுமே அந்த அமல்களுக்கு விலை மதிப்பு ஏற்படுகின்றது. அவைகள் எந்த அளவு தொடர்பை ஏற்படுத்துகின்றனவோ அந்த அளவு சக்தி நிறைந்தனவாய்ச் சமையும். எந்த அளவுக்கு அமல்கள் அதிக அமைதியுள்ளனவாயும் மனப்பூர்வமானவையாயும் சக்தி நிறைந்தனவாயும் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அந்த அமல்களுக்குரிய சரியான அந்தஸ்தும் விலை மதிப்பும் ஏற்படும். அமல்களுக்கு அந்தஸ்தையும் விலை மதிப்பையும் அளிக்கும் பொருள் யாதெனில், அவ்விஷயத்தில் இடப்பட்டுள்ள ஏவல்களை ஒரு கயிறு என மதித்து, அந்தக் கயிற்றைப் பிடித்துத் தொங்கி, அல்லாஹ்வை அடைவதற்குரிய முயற்சியில் ஈடுபடுவதாகும்"

பிறிதொரு கடிதத்தில் அவர்கள் வரைவதாவது:—

"இபாதத்துகள், திக்றுகளின் விஷயத்தில் எவை யெவைகளை ஓதி வணங்கி வரவேண்டுமெனக் கூறப் பட்டுள்ளதோ அவைகளைக் கவனித்து ஓதி வணங்கி வருவதில், அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதி களை உறுதிகொண்டு, அதற்கெனப் பிரத்தியேக முயற்சி யெடுத்து அந்த அவ்ருதுகளைத் தொடர்ந்து ஓதி வர வேண்டும். அவ்வாக்குறுதிகளின் மீது நம்பிக்கைக் கொள்ளும் முயற்சியே மகத்தான விஷயமாகும். இந்த நம்பிக்கை இருதயத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதால் அந்த இபாதத்துகளுக்கு இது இருதயத்தின் ஸ்தானத்தை வகிக்கின்றது. இதன் வாயிலாகவே ஆத்மிக முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியும்"

ஈமான் இஹ்த்திஸாபின் இந்த ரசாயனப் பொடியைக் கொண்டு மனிதன் தன் முழு வாழ்க் கையையும் பத்தரை மாற்றுத் தங்கமாகச் சமைத் துக்கொள்ள முடியும். வாழ்க்கையிலே குறுக்கிடும் தொழில்கள், பழக்கவழக்கங்கள், உலகத் தேவை கள், இரவு பகல்களுக்குரிய அமல்கள் ஆகியவை களைப் பற்றிய குறிப்புக்களைச் சிந்தனையிலே பதியவைத்து, நிய்யத்துக்களைச் சரிசெய்து, நன்மையை நாடுவதின் மூலம் ஒருவன் தனது வாழ்க்கை நிகழ்ச்சிகள் அனைத்தையும் பரிபூரண இபாதத்தாகச் சமைத்துக் கொள்ளலாம். ஆனல் மௌலானா முஹம்மது இல்யாஸ் (ரஹ்) அவர்கள் கூறுவதைப் போன்று, அல்லாஹுதஆலா இவ்

வஸ்துகளின் தன்மையை எவ்விதம் அமைத்துள்ளான் என்றால், கலிமாவுடன் எந்த அளவு தொடர்பு உள்ளதோ, தொழுகை பயபக்தியுடன் எந்த அளவு பேணி வரப்படுகின்றதோ அந்த அளவுக்கு, அவ்வஸ்துக்களில் சக்தி பிறக்கின்றது. அந்த ஈமான் இஹ்த்திஸாப் வரையிலும் கொண்டு சேர்ப்பதற்கு இதுவே வழியாகும். இவ்வஸ்துக்களில் கவனஞ் செலுத்துவதே அந்த ஸ்தானத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடும். நபிலான திக்றுகளின்மூலம் அங்கே சென்றடைந்தால், நபிலின் அளவுக்குச் சென்றடைவான்; பர்ளுகளின் மூலம் அடைவது பாராளு மன்னனின் மூலம் அடைவதற்குச் சமமாகும்.

தற்பொழுது நடைபெற்றுவரும் சன்மார்க்கத் தொண்டான இந்தத் தப்லீகு இயக்கம், ஈமான், இஹ்த்திஸாப், இக்லாஸை அடைவதற்குச் சரியான மார்க்கமாகும். மௌலானா ஒரு லிகிதத்தில் வரைவதாவது:—

“அல்லாஹ் என்ற புனிதக் கலிமாவை மேலோங்கச் செய்வதற்காகவும், வேத வெளிப்பாடு (வஹீ) களைப் பரத்துவதற்காகவும் மேற்கொள்ளும் முயற்சியை, தூய எண்ணத்துடனும் தனது இறைவனை இறைவன் என மதித்து அவனது திருவுளப் பொருத்தத்தை அடைந்து கொள்வதற்காகவுமே செய்ய வேண்டும். மேலும் அது மரணத்திற்குப் பின்னுள்ள அனுகூல சாதனம் என நம்பிச் செய்ய வேண்டும். வாஸ்தவத்தில் இவ்வித வாழ்க்கையுடனேயே அல்லாஹுதஆலாவின் வாக்குறுதிகள்

*சம்பந்தப்பட்டுள்ளன. ரஹ்மத்தை ஆதரவு வைப்பவர்கள் இவர்களே! என்ற ஆயத்து மாத்திரமின்றி, நூற்றுக்கணக்கான ஆயத்துகள் இதற்கு சான்ருய் நிற்கின்றன''*

இந்த ஈமான் இஹ்த்திஸாபை அடைந்து கொள்ள வேண்டுமானல், தன்னலக் கருத்தும் 'பிறருக்கு நேர்வழி காட்டுகிறேம்' என்ற எண்ணமும் இருக்கக்கூடாது. இயன்றளவு இறைவனது திருவுளப் பொருத்தத்தை அடைந்து கொள்ள வேண்டும்; அவனது ஆக்ஞைக்கு அடிபணிய வேண்டும்; அல்லாஹ்வின் மகத்துவத்தையும் அவனிடும் கட்டளையென்ற அச்சத்தையும் அமைதியையும் முன்னிறுத்திச் செயல்பட வேண்டும் என்ற எண்ணமிருப்பது அவசியமாகும்.

மற்றொரு கடிதத்தில் மௌலானு அவர்கள் கூறுவதாவது :—

"தனது வாழ்க்கை சம்பந்தமான செயல்களையும் தனது முயற்சியையும் பலனைக் கருதியோ தனது அறிவே பெரிதெனக் கருதியோ செய்யாமல், அல்லாஹ்வின் கட்டளைக் கிணங்கத் தனது முயற்சி என்னும் படகை மனப்பூர்வமாகச் செலுத்துவது மார்க்கத்தின் அடிப்படையான விஷயங்களைச் சேர்ந்ததாகும். அமலுக்குப் பின் பலன் விளையவே செய்யும். பலாபலன்கள் திறந்த கண்களுக்குப் பளீரெனத் தெரியும். பலாபலன்களும் பிரயோஜனங்களும் கண்களுக்கெதிரே காட்சியளிக்கும் தருணத்தில், ஒருவன் அவைகளுக்கு அடிமையானல்,

பிரயாசைக்குரிய பலனும் மதிப்பீடும் ஆயிர மடங்கு குறைந்துவிடுகின்றது. பத்ருப்போரின் சம்பவம் சிந்தனையாளர்களுக்கு முன்னிற்கின்றது. அப்போருக்குப் பின்னுள்ளவர்களின் பிரயாசை அதிகமாக இருந்திடினும் அவர்கள் முன்னுள்ளவர்களின் அந்தஸ்தை அடைய முடியவில்லை. மக்கா வெற்றியின் நிலையும் அவ்வாறுதான்.

لَا يَسْتَوِى مِنْكُمْ مَنْ اَنْفَقَ مِنْ قَبْلِ الْفَتْحِ وَقَاتَلَ

"(மக்கா) வெற்றிக்கு முன்னல் செலவு செய்து போர் புரிந்தவர்களுக்கு உங்களில் எவரும் சமமாக மாட்டார்கள்" என்று ஹதீது என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் வல்லமையையும் தத்துவத்தையும் புரிந்து கொள்ளாத சிலர், அல்லாஹ்வின் வேலையில் தொண்டர்களாக எழுகின்றார்கள். எனினும் தம் சிறு மதிக்கு எட்டும் குறுகிய பலாபலன்களை முன்னிறுத்தி, தமது பிரயாசையை ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தி எழுகின்றனர். ஆனல் அல்லாஹ்வின் நியதி யாதெனில்,

اَنَا عِنْدَ ظَنِّ عَبْدِى بِى

"எனது அடியான் என்னைப் பற்றி எவ்வாறு எண்ணுகின்றானே அவ்வாறு நான் நடந்து கொள்வேன்" (ஹதீது குத்ஸி) என்பதே. அதாவது நமது எண்ணத்திற்குத் தக்கவாறே பலன் கிடைக்கும். குறைமதி படைத்த நாம் நமது பிரயாசைக்குக் கிடைக்க விருக்கும் பலாபலன்களின் அளவுக்கு

எல்லே கோலி அவைகளை மிகவும் குறைத்துவிடுகின்றேம். ஆனல், ஒவ்வொரு முயற்சியையும் அதனதன் ஸ்தானத்தில் அமைத்து, "நல்லோர்களின் கூலி வீணுக்கப்பட மாட்டாது" என்ற குர்ஆன் அறிவிப்பின் மீது உறுதியான நம்பிக்கை பூண்டு, ஏன்? எதற்கு? என்ற வினு எழுப்பாமல், 'இவ்விஷயத்தில் இவன் பித்துக்கொண்டவன்' என அழைக்கப்படுவதை விரும்பி, இம்முயற்சியில் அழிந்து போவதிலேயே தனது நித்திய வாழ்வு இருக்கின்றது என நமது சிற்றறிவின் மூலம் கருதி இருந்தால், உலகத்திலேயே சுவர்க்கத்தின் இன்பத்தைப் பெற்றிருக்கலாம். ஆனல் நமது நடப்பு இதற்கு மாருக உள்ளது. எனினும் இத்தருவாயில் சரியான சுன்னத்திற்குப் புத்துயிரளிக்கும் எண்ணத்துடன் பிரயாசைகளைத் துவங்கி, அல்லாஹ்வினிடத்தில் பிரார்த்தித்துக் கொண்டே இருப்போமானல், அவனது நிரந்தர அருளாலும் நித்திய கிருபையாலும் அப்பாக்கியம் கிடைத்துவிடுமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லே.

தப்லீகிற்காக வெளியேறிச் செல்லுங் காலத்தில் செல்பவர்கள், எந்த மக்களிடத்தில் செல்கிருர்களோ அவர்களுக்கு நாம் (ஹிதாயத்) நேர்வழி காட்டுகிறேம் என்ற நினேப்பை அறவே அகற்றி விட வேண்டும். ஹிதாயத்துச் செய்வதை அல்லாஹ் தனது பொறுப்பாக ஏற்றுள்ளான். ஆனல் முயற்சி செய்பவர்கள், இதன் கருத்தை விளங்காமல் (ஹிதாயத்தை அல்லாஹ்தான் ஏற்றுள்ளானே என்ற எண்ணத்தில் சிக்கி) தமது முயற்சியைக்

குறைத்துவிடக்கூடாது. முயற்சி எடுத்துக்கொள்பவர் முயற்சிசெய்யும்நேரத்தில் கடமையில் கண்ணுங் கருத்துமாய் இருத்தல்வேண்டும். நமது இருதயம் ஆட்சியாளனுகிய அல்லாஹ்வின் பெருமையிலேயே மூழ்கியிருக்கச் செய்யவேண்டும். தமது தியாகத்தைத் தூய எண்ணத்துடன் நிறைவேற்றும் சிந்தனையில் ஒரே கவனமாயிருத்தல் வேண்டும். வெளிச் செல்லுங்காலத்தில் சிறப்பாக திக்ரிலும் தனிமைச் சிந்தனையிலுமே தமது நேரத்தைக் கழிக்கவேண்டும்; இவைதாம் வெளிச் செல்பவர்களின் பொறுப்புக்களாம்."

## குணவொழுக்கத்தின் நீரூற்று.

இந்தத் தப்லீக் இயக்கம் சீரிய குணவொழுக்கத்தையும் சிறந்த மனப்பண்பாட்டையும் அடைவதற்குச் சரியான மார்க்கமாகும். பணிவு, தாழ்மை, மூமின்களை கவுரவித்தல்,சிருஷ்டிகளின்மீது கிருபைகூர்தல்,பெரியோர்களுக்கு மரியாதை செலுத்துதல், சிறுர்கள்மீது அன்பு பாராட்டுதல் போன்ற உயரிய பண்புகளைப் பழகிக்கொள்வதற்கு இவ்வேலை வாய்ப்பளிக்கிறது. மற்ற வழி துறைகளில் இவைகளை அடைவது சிரமமாகும்.தனது குறைகளைச்சிந்தித்து மற்றவர்களின் நற்சுபாவங்களைக் கவனிப்பதும், பிறர்பாற் குறைகாணின் அதை மறைப்பதுமே இதிலுள்ள பிரதான விஷயம். ஒருவரின் நற்சுபாவங்களை நோக்குகையில் அவருக்குக் கண்ணியமளித்து அவர்மூலம் பயனடைந்துகொள்ள வேண்டும். முஸ்லிம்களின் மூலமாகப் பயன்பெறுவதையே தனது குறிக்கோளாக நியத்துச் செய்துகொள்ள

வேண்டும். ஒரு கடிதத்தில் மௌலானா அவர்கள் குறிப்பிடுவதாவது:-

"சில நல்ல சுபாவங்களும் சில கெட்ட சுபாவங்களும் இல்லாமல் எந்த முஸ்லிமும் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதனிடத்தும் சில நன்மைகளும் சில தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஒருவரின் குறைகளைத் துருவிப் பார்க்காமல் அவைகளை மறைத்து, அவரிடத்தே அமைந்துள்ள நற்சுபாவங்களை ஆசித்து அவருக்குக் கண்ணியமளிப்பது என்ற வழக்கம் முஸ்லிம்களாகிய நம்மிடையே தோன்றிவிடின், கணக்கற்ற குழப்பங்களும் எண்ணற்ற இழிமுறைகளும் தாமாகவே நீங்கி, ஆயிரக்கணக்கான நல்ல விஷயங்கள் தாமாகவே உற்பத்தியாகிவிடும். ஆனால் நமது நடப்பு இதற்கு மாறாக உள்ளது. ஒருவன் இதர படைப்பினங்களுடன் நடந்துகொள்வதற்கேற்றவாறே வல்லமை மிக்க அல்லாஹ் அம் மனிதனுடன் நடந்துகொள்கிறான். ஒருவன் தனது நப்சு மிகவும் மாசு நிறைந்தது, அற்பமானது, சுயநலப் பித்துக்கொண்டது, சர்வ செயல்களையும் பாழ்படுத்தக்கூடியது என்று அனுபவவாயிலாகவும், மனப்பூர்வமாகவும் உறுதிகொள்ளவேண்டும். இறைவனது திருவுளச்சித்தத்தின் இயல்பே அலாதியானது. "மரண பரியந்தம் இந்த நப்சு வழிக்குவராதுபோல் தெரிகிறது; நம்மைத் தவிரவுள்ள அல்லாஹு ᵘவின் மற்ற அடியார்கள் நற்சுபாவமும் பரிசுத்த உள்ளமும் படைத்தவர்களாகவே யிருக்கின்றனர்; அவர்கள் தீனின் எக்காரியத்தைச் செய்தாலும் அது உள்ளும் புறமும் ஓர் சிறந்த அமலாகவே இருக்கும்; எனவே நபிபெருமானாரவர்கள் போதித்தவைகளை அவர்களிடையே நாம் பரத்தினால் 'நன்மையைக் காட்டிக் கொடுப்பவர் அதைச் செய்தவரைப் போலாவார்' என்ற நியதிப்படி, அல்லாஹு ᵘதஆலா தனது திருவருளாலும் அப்புனித புருஷர்களின் பொருட்டாலும் பரகத்தாலும் அதிலிருந்து நமக்கும் சன்மானமாகப் பங்கு கொடுப்பான்" என்ற நிய்யத்துடன் தப்லீக் செய்யவேண்டும்.

## சர்ச்சைகள் புரியலாகாது

இவ்வேலையில் சர்ச்சைகள் புரிவதும் தர்க்கித்துக் கொள்வதும் அறவே தடுக்கப்பட்டுள்ளன. எவரையும் அவரது குறையினைத் தடுப்பதற்குப் பதிலாக அவரை நல்வழியில் ஈடுபடுத்த முயல வேண்டும். தீனின் அடிப்படையானதும் பொதுவானதுமான விஷயங்களைத் தவிர, (ஜுஸ்யிய்யத்தான) தகராறுள்ள விஷயங்களில், உலமாக்களிடத்துக் கலந்தாலோசிக்காமலும், அவர்களது நற்சாட்சிப் பத்திரமில்லாமலும் தலையிடலாகாது. மக்கள் ஒத்துவராவிடில் சீறி விழாமல் தனது குறையினை ஏற்றுக் கொண்டு, அவர்களை நல்ல முறையில் க்வுரவித்து அவர்களது பேச்சுக்களை நல்லெண்ணத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் தனது ஆர்வத்தையும் (துஆ) பிரார்த்தனையையும் குறைத்துவிடக் கூடாது. மக்கள் உணர்கிறார்களில்லையே என்று மக்களது உணர்ச்சியில் குறைகாணுவதற்கு பதிலாக, தான் விளக்கி வைத்ததில் குறையிருப்பதாக கருத வேண்டும். ஒருவர் எவ்வளவு அதிகமாக சன்மார்க்க சம்பந்தமான வேலைகளிலும் மிக முக்கிய அலுவல்களிலும் ஈடுபட்டுள்ளாரோ அவர் அந்த அளவு தமது சொந்த வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற வேலைகளை ஏற்பது அவருக்குச் சிரமமாகத்தான் இருக்கும். ஒளிவு நிறைந்த திரைகள் இருண்ட திரைகளைவிட அதிகமாகத் திரையிடக் கூடியனவாயிருக்கின்றன. எனவே அவர்களுக்கு எதிர்ப்போ மறுப்போ அளிக்காமல் முயற்சியில்

ஈடுபட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். இந்த உலக ஆசாபாசங்களில் மூழ்கிக் கிடக்கக்கூடியவர்கள் இது அழிந்து போகும் உலகம் என அறிந்து கொண்டே தங்களது தொழில்களையும் அலுவல்களையும் ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு முன் வரத் தயாராகாமலிருக்கும்போது, சன்மார்க்க சம்பந்தமான காரியங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் இது தீன் சன்மார்க்க விஷயங்கள் என்று மதித்துக் கொண்டே தங்களது பணிகளையும் விருப்பமான செயல்களையும் இலேசாக ஒதுக்கி வைத்துவிட்டு எவ்வாறு முன்வர முடியும்? என்பதை நாமே சற்று யூகித்துப் பார்க்க வேண்டும். அப்பால் தான் முழு மனதுடன் முயற்சித்த பின்னரும் தனது தவறையும் குறையையும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு அமலையும் தௌபா, இஸ்திக்பாருடனும் தான் குறை செய்திருக்கக்கூடுமென்ற நினைப்புடனுமே முடிக்க வேண்டும்.

**ஒவ்வொருவரது அமலின் இறுதிக் கட்டமும் தாம் குறை செய்திருக்கக் கூடுமெனக் கருதி அதற்காகத் தௌபா, இஸ்திக்பார் செய்து விசனப்படுவதாகவே இருக்கவேண்டும். இதுதான் மெய்யான வணக்கமாகும். அதாவது இயன்றளவு செய்வதும் அதன் முடிவில் குறையை உணர்ந்து தௌபா, இஸ்திக்பார் செய்வதுமான இவ்விரு விஷயங்களும் தமது தகுதிக்குத் தக்கவாறு தெய்வ சமீபத்தைப் பெற்றதாயும், ஏற்கத்தக்கதாயும், அந்தஸ்தை உயர்த்துவதாயும் அமையும்.**

**(மௌலானாவின் கடிதம்)**

## அல்லாஹ்வின் அனுக்கிரஹம் அடைய வழி

"எனது அடியான் பர்ளுகளை நிறைவேற்றுவதின் மூலம் என்னை அணுகுவது ஏனையவைகளின் மூலம் என்னை அணுகுவதைவிட எனக்கு மிகவும் விருப்பமானதாகும்" என்று அல்லாஹ் கூறுகிறான் (ஹதீஸ்குதுஸி)

ஸஹாபா பெருமக்கள் பர்ளுகளைச் செய்வதின் மூலமே அல்லாஹ்வின் நெருங்கிய நேசர்களானார்கள். மேலும் அதன் வாயிலாகவே தமது நப்ஸைப் பழக்கிப் பரிபக்குவமடையச் செய்து, ஆத்மிக முன்னேற்றத்திற்காக முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தின் ஐந்து கடமைகள், ஜிஹாது ஹிஜ்ரத், தப்லீக், இஷாஅத்துல் இஸ்லாம், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் போன்ற பணிகளைப் புரிந்தே அவர்கள் அத்துணை பெரும் பதவிகளையும் பாக்கியங்களையும் அடைந்தார்கள். அப்பெரியார்களுக்கு நபி பெருமானுருடன் கலந்துறவாடும் பேற்றைத் தவிர்த்து, அல்லாஹ்வுடன் இருந்த நெருங்கிய தொடர்பிற்கும் அக புற ஒழுக்கப் பண்பாட்டிற்கும் இம்முறையில் அவர்கள் கடமைகளைப் புரிந்ததும், நன்மையை நாடி உறுதியுடன் உழைத்து அவ்வழியிற் பல இடர்களை எதிர்த்துத் தியாகங்கள் புரிந்து தம் நிலை பிறழாததுமே காரணங்களாம். ஈமானுடனும் உறுதியுடனும் கடமைகளைப் புரியச் சித்தமாகி, அதன் மூலம் அல்லாஹ்வின் அனுக்கிரஹத்தை அடைவதுதான் நபி பெருமானார் (ஸல்) காட்டிய நல்வழி. இவ்வழியை அனுசரித்துச் செய்யும் அற்பப் பணிக்கு அதிக

நன்மை கிடைக்கின்றது. வேறு வழியின் முடிவு இவ்வழியின் ஆரம்பமாகும். இதன் முடிவுக்கு ஓர் எல்லை யில்லை. நபித்துவ காலத்திற்குப் பின் முஸ் லிம்கள் இவ்வழியை விட்டும் அப்புறப்படலானார் கள். சிறுகச் சிறுக அவர்களது சுபாவங்களிலே சோம்பலும் காலங்கடத்துவதும் உண்டாயின. உள்ளதைக் கொண்டு போதுமாக்குதல் என்ற குணம் இல்லாதொழிந்து போய் விட்டது. இலே சான பொதுவான விஷயங்கள் மிக அற்பமானவை எனக் கருதப்படலாயின. ஆரம்ப விஷயங்க ளெல்லாம் முடிவான விஷயங்களாயின. பகிரங்க மானவைகளெல்லாம் மறைமுகமானவைகளாயின. மனிதன் சொற்பப் பணி புரிந்து அதிக நன்மை அடையும் வழியை விட்டுவிட்டு, அதிகம் செய்தா லன்றி ஒரு சிலதை அடைய முடியாதே அவ்வித வழி கடைப்பிடிக்கப்படலாயிற்று. எனினும் அந்த இராஜபாட்டை ஒரேயடியாக அடைபட்டுப் போக வில்லை. ஒவ்வொரு காலத்திலும் இவ்வழியில் நடப் பவர்களும், நடாத்திச் செல்பவர்களும் இருந்தே வந்துள்ளனர். அவ் வக்காலப் பெரியார்கள் சன் மார்க்கத்தின்பால் அழைப்பதையும், சுன்னத்தை நடைமுறையில் கொணர்ந்து சன்மார்க்கத்தை வலுப்படுத்துவதையுமே அல்லாஹ்வை அடையும் வழியெனக் கருதி வந்தார்கள். ஹஜ்ரத் முஜத்தித் அல்புதானீ (ரஹ்) ஒரு லிகிதத்தில் வரைந்துள்ள தாவது :—

“இந்த ஏழை தனது உள்ளக் கிடக்கையையும், நிலையையும் எழுதுகிறான். நான் இல்மு மஃரிபத்

அஹ்வால், மகாமாத் போன்ற கலா ஞானங்களிலே திளைத்திருந்தேன். அவை என்னை மேகங்களை போன்று சூழ்ந்திருந்தன. அல்லாஹ்வின் அருளால் செய்வதையெல்லாம் செய்து முடித்துவிட்டேன். இனி நாயகத்தின் நடைமுறைகளை அமலில் கொண்டு வருவதைத் தவிர வேறு விருப்பம் எனக்குக் கிடையாது. ஷரீஅத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்காக முயற்சிப்பதும் அதன் சட்டதிட்டங்களிலிருந்து ஏதாவது ஒன்றை உயிர்ப்பிப்பதும், சிறப்பாக இஸ்லாமிய சட்டதிட்டங்கள் அழிந்து கொண்டிருக்கும் இக்காலை மிகப் பெரிய நன்மைக்குரிய விஷயங்களாம். அல்லாஹ்வின் பாதையில் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்வது ஒரு ஷறஹின் மஸ்அலாவை நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஈடாகாது, ஏனெனில் இது அல்லாஹ்வின் அடியார்களில் மிகவும் சிரேஷ்டரான நபிமார்களைப் பின்பற்றும் செயலாகும். மேலும் இது அப்பெரியார்களுடன் பங்கு பெறுவதுமாகும். அல்லாஹுத தஆலா இப்புனித புருஷர்களுக்காக பரிபூரண பாக்கியங்களையும், நன்மைகளையும் தரவிருக்கின்றான் என்பது தெளிவு, கோடிக்கணக்கில் செலவு செய்வது மற்றையோருக்கு எளிதான காரியமே".

கானே அஃலம் என்பாருக்கு நமது முஜத்தித் ஒரு கடிதத்தில் எழுதியதாவது :—

"இன்று சிறு அமலுக்குப் பெரிய நன்மைகள் அளிக்கப்படுவதுடன் மிக்க கவுரவத்துடன் அவை ஏற்கப்படும் காலமாகும். அஸ்ஹாப் கஹ்பினர் ஹிஜ்ரத் சென்றதைத் தவிர வேறெந்த அமலும் செய்தார்களில்லை இந்த ஒரே அமலாலேயே அவர்கள் மாபெரும் மகத்துவத்தையும் பாக்கியத்தையும் அடைந்தார்கள். பகைஞர்கள் வெறுமனே அமைதியாக இருக்கும் சந்தர்ப்பத்தைவிட, அவர்கள் போராட்டம் துவங்கும் தருணத்தில் சிறிது ஓடியாடித் தன் வீரத்தைக் காட்டிக் கொள்

ளும் போர்வீரன் அதிகப் பலனடைகிருன். ஹஜ்ரத் காஜா அஹ்ருர் (ரஹ்) அவர்கள், "நான் பீர்முரீதின் வேலையைத் தொடங்கினல் உலகில் எந்தப் பீருக்கும் முரீதுகள் கிடைக்க மாட்டார்கள்; ஆனல் மற்ருெரு வேலையைச் செய்யும்படியே நான் பணிக்கப்பட்டிருக்கிறேன்; அது ஷரீஅத்தை நடைமுறையில் கொண்டு வருவதும் தீனுக்கு சக்தியளிப்பதுமாகும்" என்று அடிக்கடி கூறுவதுண்டு. இங்ஙனமே அவர்கள் அரசர்களுடன் கலந்துறவாடி, தமது செல்வாக்கினல் அவர்கள் வழிபடச் செய்து, அவர்கள் மூலமாகவே ஷரீஅத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்கள்"

## மெய்யான திக்று

முஜத்தித் அல்புதானீ மற்ருெரு லிகிதத்தில் வரைவதாவது :—

"ஒருவன் திக்று செய்து கொண்டு வீற்றிருக்கையில் ஒரு குருடன் எதிர்படுகிருன். அக்குருடனுக்கு முன் ஒரு கிணறு இருக்கிறது. மற்ருெரு அடியெடுத்து வைத்தால் அவன் கிணற்றுக்குள் வீழ்ந்து விடுவான். இவ்விடத்தில் இம்மனிதன் 'திக்று, செய்து கொண்டு வீற்றிருப்பது நலமா? அல்லது குருடனைக் காப்பாற்றுவது நலமா? என்ற வினு எழுகின்றது. இதற்குரிய பதில் யாதெனில், திக்று செய்வதைக் காட்டிலும் குருடனைக் காப்பாற்றுவதே சாலச்சிறந்தது என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. ஏனெனில் அல்லாஹு தஆலா அம்மனிதனின் திக்றின்பால் தேவையற்றவன், ஆனல் குருடனே இறைவன் பால் தேவைப்படும் ஓர் அடியான். அவனுக்கு நிகழவிருக்கும் இடரை அகற்றுவது அவசியத்திலும் அவசியமாகும். அதிலும் குறிப்பாக அம்மனிதனைக் காப்பாற்ற வேண்டும் என்ற இறைவனது

கட்டளையு மிருக்கிறது. இத்தறுவாயில் இறைவனது கட்டளையை முன்னிறுத்தி அவனைக் காப்பாற்றுவதே திக்ருகும். ஏனெனில் அது அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிவதாகும். வெறும் திக்று மட்டும் செய்வதில் ஒரே கடமையான அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய கடமை மட்டும் நிறைவேறுகின்றது. ஆனால் அம்மனிதனைக் காப்பாற்றுவதில் அல்லாஹ்வின் கட்டளையையும் கவனித்துச் செய்வதால் இரு கடமைகள் நிறைவேறுகின்றன. ஒன்று அல்லாஹ்வின் கடமை; மற்றொன்று அடியானின் கடமை அத்தருணத்தில் திக்று செய்து கொண்டு வீற்றிருப்பது பாவமாகவும் கூடும். ஏனெனில் எல்லாச் சமயத்திலும் திக்று செய்து கொண்டிருப்பது உசிதமாவதில்லை. சில சந்தர்ப்பத்தில்தான் அது உசிதமாகின்றது. ஈதுப் பெருநாட்களிலும் அய்யாமே தஷ்ரீக்கிலும் நோன்பு நோற்காம லிருப்பதும், மக்ரூஹ், ஹறுமான வக்துகளில் தொழுகாம லிருப்பதும் நோன்பு நோற்பதையும் தொழுவதையும் விடச் சிறந்தவையாம்''

உண்மையில் பிற்காலத்தவர்களிடையே தான் திக்று என்பதற்கு நாவால் ஓதும் திக்று என்ற குறுகிய அர்த்தம் கூறப்படவும் உணரப்படவும் நேர்ந்தது. வாஸ்தவத்தில் திக்று மிக்க விரிவான பொருள் கொண்ட பதமாகும். ஹஜ்ரத் முஜத்தித் ஸாஹிப் (ரஹ்) அவர்கள் உயர்ந்த தத்துவங்களும் கலாஞானங்களும் நிறைந்த தமது நூலில் குறிப்பிடுவதாவது :—

"திக்று என்பதின் பொருள் இயன்றளவு மறதியை நீக்குவதே தவிர பலர் நினைப்பதே போன்று கலிமா லாஇலாஹ இல்லல்லாஹு'வைத் திரும்பத் திரும்பச் சொல்வதோடு அல்லது அல்லாஹ், அல்லாஹ் என்ற இஸ்முதாத்தை ஓதிவருவதோடு முடிவடைந்து விடுவதன்று.

சுருங்கச் சொல்லுமிடத்து இறைவனது கட்டளையை ஏற்று நடப்பது, அவன் விலக்கியதை தவிர்ந்துகொள்வது ஆகிய யாவும் திக்றைச் சார்ந்ததாகும். கொடுக்கல் வாங்கல், நிகாஹ், தலாக் ஆகிய எல்லாவற்றையும் ஷரஹின் எல்லையைக் கவனித்துச் செய்வதும் திக்ரேயாகும். ஏனெனில் ஷரீஅத்தைப் பேணி அவைகளை அமல் செய்கையில் கட்டளையிடுபவனும் விலக்குபவனுமான அல்லாஹ்வின் 'தாத்' அமல் செய்பவனுக்கு முன்னிற்கிறது; எனவே மறதிக்கு அங்கே இடமிருக்காது ".

## நன்மைகளைக் கொள்ளை கொள்ளும் திட்டம்

தீனைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் அல்லாஹ்வின் பாதையில் செல்லும் ஹிஜ்ரத், இஸ்லாத்தின் கடமைகளையும் கட்டளைகளையும் நடைமுறையில் கொணர்ந்து பரத்துவதற்காகச் செய்யப்படும் இந்த யாத்திரை, தீனின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளும் ஆசையாலேயே செய்யப்படுவதா யிருந்தால். மேலான பல திக்று, இபாதத், வணக்க வழிபாடுகள் இதனுள்ளே அடங்கி விடும். இதற்காக அடியெடுத்து வைப்பவர்கள், இவ்வேலையில் ஈடுபடுபவர்கள் கீழ்க் காணும் ஆயத்தை மெய்ப்பிப்பவராகி விடுவர்.

اَلتَّآئِبُوْنَ الْعٰبِدُوْنَ الْحَامِدُوْنَ السَّآئِحُوْنَ

الرَّاكِعُوْنَ السَّاجِدُوْنَ الْاٰمِرُوْنَ بِالْمَعْرُوْفِ

وَالنَّاهُوْنَ عَنِ الْمُنْكَرِ وَالْحٰفِظُوْنَ لِحُدُوْدِ اللّٰهِ ط

وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ ○

"தௌபாச் செய்து மீளுகிறவர்கள், வணங்குகிறவர்கள், புகழ்கிறவர்கள், அல்லாஹ்வின் பாதையில் யாத்திரை புரிகிறவர்கள், ருகூவு செய்கிறவர்கள், சுஜூது செய்கிறவர்கள் நன்மை புரியும்படி ஏவுகிறவர்கள், தீமையை விலக்குகிறவர்கள் அல்லாஹ் இட்ட வரம்புகளைப் பேணி நடப்பவர்கள், இந்த மூமின்களுக்கு ஆசி கூறுக"

இந்த அமலின் மகத்துவத்தையும் தகுதியையும் ஏனைய நபில் வணக்கங்கள் அடைந்து கொள்வதில்லை; இது பர்ளுகளின் மூலம் அணுகுவதாகும்; அது நபில்களின் மூலம் நெருங்குவதாகும்"

"முயற்சி செய்யாதவர்கள் தியாகிகளுக்குச் சமமாக முடியாது. நபில்களை செய்யும் தியாகிகள் பர்ளுகளை நிறைவேற்றும் தியாகிகளுக்குச் சமமாக முடியாது. சாதாரண விஷயங்களில் ஈடுபட்டிருப்பவர்கள், தனிமையையும் உலக சஞ்சாரத்தையும் கடைப் பிடித்து, நபிமார்கள், ஸஹாபாக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பவர்களுக்குச் சமமாக முடியாது. இவ்வித பர்ளுகளுக்காக உயிரைத் தியாகஞ் செய்து முயற்சிக்கும் சுன்னத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டிய திருப்பணிக்கு நாம் ஏன் உயிர்களை அர்ப்பணிக்கா திருக்கின்றோம் என்பதை நினைக்க எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது"

(மௌலானாவின் கடிதம்)

எனவே இந்த அமல், அதன் ஒழுக்க நிபந்தனைகளின்படி செய்யப்பட்டால், பெரும் பெரும் தியாகங்கள் புரிந்து அடையும் இலட்சியங்களை வெகு எளிதில் அடைந்து கொள்ளலாம்.

"தப்லீகின் வாயிலாக அல்லாஹ்வை அணுகுவதற்கும் தியானஞ் செய்வதற்கும் எத்தனையோ உறுதிமிக்க வழிதுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதன் மகத்துவத்தை விளங்கிய சிலர் இதற்காகத் தமது சிரசையும்

உயிரையும் தர முன்வந்து விடுவார்களாயின், பல்லாயிர வணக்க வழிபாடுகளும் ஆயிரக்கணக்கான தலைகள், உயிர் களின் தியாகங்களும் நிகழ்வது மிக எளிதாகும்'' (இன்று அற்ப விஷயங்களுக்கெல்லாம் மக்கள் தலைகளையும் உயிர் களையும் பலிகொடுத்து விடுகிறார்கள்)

(மௌலானாவின் கடிதம்)

பர்ளுகளை சம்பூரணப் படுத்துவனவே நபில்க ளாகும். நபில்களின் மூலம் பர்ளுகளின் பதவி உயர்கின்றது. பர்ளுகள் எத்துணைச் சிறந்த முறை யில் நிறைவேற்றப் படுகின்றனவோ அதற்கேற்ப நபில்களுக்கு ஏற்கப்படும் பதவியும் சிறப்பும் பிறக் கின்றன. பர்ளுகள் கைவிடப்பட்டால் நபில்கள் ஏற்கப்படுவதில்லை. ஒரு அமல் எந்த அளவு சடங்கு கழிக்கும் தோரணையில் நிறைவேற்றப்படுகின் றதோ அந்த அளவு அஞ்ஞான இருள் பரவும். சடங்குப் பூஜை வெறும் மனக்கோட்டை; ஏமாற்றம் அளிப்பது. அல்லாஹ்வை நெருங்குவதற்கு அது வழியாகாது.

நன்மை செய்யும்படி தூண்டி தீமையைத் தடுத்தல்.

நன்மை செய்யத் தூண்டி தீமையைத் தடுத்தல் என்ற கடமையினைக் கைநழுவ விடுவதால் அல்லாஹ்வின் கோபமும் முனிவும் இறங்குகின்றன. பிரார்த்தனை (துஆக்)கள் செல்வாக் கின்றி ஏற்கப்படாமல் போகின்றன.

''நபி பெருமானார் (ஸல்) நவின்றருளியதாக ஹுதைபா (றலி) கூறுகிறார். எனது ஆத்மா எவன் கைவசத்தில் உள்ளதோ அந்தத் தூய்யோனின் மீது ஆணையாக! நிச்சயமாக நீங்கள் நன்மை செய்யும்படித் தூண்டுங்கள்; தீமையைத் தடுங் கள்; இல்லையேல் அதிசீக்கிரமே அல்லாஹ் உங் கள் மீது தண்டனையை அனுப்புவான். அப்பால் நீங்கள் பிரார்த்தனை புரிந்தால் உங்கள் பிரார்த் தனை ஏற்கப்பட மாட்டாது.'' (திர்மதி)

"ஆம்! பிரார்த்தனைகள் எவ்வாறு ஏற்கப்படும்? அல்லாஹ்வின் உதவி எப்படிக் கிடைக்கும்? மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்கள் கூறுவதே போன்று "நபி பெருமானவர்கள் கால முதல் இதுவரை 'ஜும்ஆ' போன்ற பிரார்த்தனைகள் ஏற்கப்படும் நேரங்களில் சன்மார்க்கத்திற்கு உதவி புரிந்தவர்களுக்காக நல்ல (துஆ) பிரார்த்தனையும் அதற்கு உதவிபுரியாதவர்களுக்கு (பத்துஆ) சாபமும் இடப்பட்டுக் கொண்டே வரப்பட்டுள்ளது"

*யா அல்லாஹ்! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களது சன்மார்க்கத்திற்கு உதவி செய்தவர்களுக்கு நீயும் உதவி செய்வாயாக. அதற்கு உதவி செய்யாதவர்களுக்கு நீயும் உதவி செய்யாதிருப்பாயாக!*

இந்த துஆவில் 'கத்லான் என்று குறிப்பிடப்பட்டுள்ள அறபிய வார்த்தைக்கு "சன்மார்க்கத்திற்கு உதவி செய்யாமலும் ஆதரவளிக்காமலும் விட்டுவிடுவது என்று அர்த்தமே தவிர எதிர்ப்பு செய்வது என்ற பொருளல்ல.

முஹம்மது (ஸல்) அவர்களது சன்மார்க்கமாகிய பரிசுத்த இஸ்லாத்திற்குத் தொண்டு புரியாமல் நாம் எந்த முகத்தைக் கொண்டு அல்லாஹ்வினிடத்தில் உதவி கோறுவது? அல்லாஹ்வின் கோபாக்கினியை அணைத்து அவனது திருவருளை நாம் அடைந்து கொள்ள வேண்டுமானால் சன்மார்க்கத்திற்குச் செய்யும் சரியான பேருழியத்தைத் தவிர வேறு எவ்வித மார்க்கமும் இல்லை. இப்பேருழிய முறை தழைத்தோங்கினால்தான் வல்லமை மிக்க அல்லாஹ் முஸ்லிம்கள் பாலும் அவர்கள் மாரலாக சர்வ சிருஷ்டியினங்கள் பாலும் தனது பேரருட் பாக்கியத்தைச் சொரிவான். வாஸ்தவத்தில் அல்லாஹ்வின் கோபாக்கினியை அணைக்கும் தண்ணீர் தப்லீக் இயக்கத்தைத் தவிர வேறு எதும் இருக்க முடியாது.

ஆங்கில அரசாங்கத்தாரின் இராணுவம் உலக வாழ்க்கையை வளம்பெறச் செய்வதற்காக ஓயாது உழைத்ததே போன்று நாமும் முஸ்லிம்களின் மெய்யான கவுரவத்திற்காக

வும், சன்மார்க்கக் கர்ரியங்களிலும் ஓயாது உழைத்து முயற்சித்தால் தான் அல்லாஹ்வின் உதவியையும் பெறமுடியும்; உயர்வையும் அடைய முடியும். இதுவே அல்லாஹ்வின் நியதி!

*"அல்லாஹ்வின் நியதிக்கு மாறுதலை நீர் காணமாட்டீர். நிச்சயமாக ஈமான் கொண்டு அப்பால் நாட்டைத் துறந்து அல்லாஹ்வின் பாதையில் முயற்சி எடுத்துக்கொண்டவர்கள் தாம் அல்லாஹ்வின் பேரருளை எதிர்பார்ப்பதற்கு அருகதையுடையவர்கள்"* (குர்ஆன்)

முஸ்லிம்களின் சகல திகைப்பிற்கும் இதுவே பரிகாரம்! அவர்களின் சிரமங்கள் நீங்குவதற்கும் இதுதான் வழி! தற்கால உலகமேதைகள் அகிலத்தைப் பிடித்தாட்டும் அமைதியின்மையையும், எதிர்நோக்கி வரவிருக்கும் சிக்கல்களையும் நினைத்து எந்த அளவு சஞ்சலமுறுகிறார்களென்றால் அதற்கொரு எல்லையே கிடையாது. ஆனால் என் உள்ளம் நிம்மதியுடனிருக்கின்றதென்றால், அது சன்மார்க்கத்தை தழைத்துக் கிளைத்துச் செழிக்கச் செய்யும் இந்த இயக்கத்தை வலுவுறச் செய்வதைச் சார்ந்தே நிற்கின்றது. முஸ்லிம்கள் மனோ உறுதியுடன் இது தமக்குரிய சிகிச்சை என நம்பி தமது முழு முயற்சியினை இதற்காகவே அர்ப்பணித்துவிடுவார்களாயின், எவன் அல்லாஹ்விற்காக ஆகிவிடுகின்றானோ அல்லாஹ் அவனுக்காக ஆகிவிடுகின்றான் என்ற வாக்குறுதிக்கேற்ப அல்லாஹுதஆலா தனது மறைவான நாட்டத்தை நமது சுபிட்சத்திற்காகவும் எழுச்சிக்காகவும் திருப்பிவிடுவான். நபிபெருமான் ஸல் ஓதிய குத்பாவில்

اِنَّ الدُّنْيَا خُلِقَتْ لَكُمْ وَاَنْتُمْ خُلِقْتُمْ لِلْاٰخِرَةِ

*"நிச்சயமாக இம்மை உங்களுக்காகப் படைக்கப்பட்டது. நீங்கள் மறுமைக்காகவே படைக்கப்பட்டீர்கள்"*

என்றதொரு பொன்னுரை உள்ளது. நீங்கள் மறுமைக்காகப் படைக்கப்பட்டீர்கள் என்பதை நாம் எந்த அளவு அனுஷ்டிக்கின்றோமோ அந்த அளவுக்கு 'இம்மை உங்களுக்காகப் படைக்கப்பட்டது' என்ற காட்சியினைக் காணலாம். மறுமைக்காக மேற்கொள்ளும் முயற்சியும் சன்மார்க்கத்தை மிக முக்கியத்துவத்துடன் பற்றியொழுகுவதும் இம்மையைக் கவருவதற்குரிய சரியான மார்க்கமும் மாத்திரையுமாகும். (மௌலானாவின் கடிதம்)

اَللّٰهُمَّ انْصُرْ مَنْ نَصَرَ دِيْنَ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ

عَلَيْهِ وَسَلَّمْ وَاخْذُلْ مَنْ خَذَلَ دِيْنَ مُحَمَّدٍ

صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

(இதன் பொருள் 83ம் பக்கம் இரண்டாவது பாராவில் காண்க.)

## தொழுகையின் தத்துவ விளக்கம்.

ஆசிரியர்:

(மௌலவீ B. A. கலீலுர்ரஹ்மான் ரியாஜி)

கபீர், ரூஹுல் பயான், பைலாவி போன்ற தப்ஸீர்களிலிருந்தும், புகாரீ-முஸ்லிம் போன்ற ஹதீது கிரந்தங்களிலிருந்தும் திரட்டிச் சேர்க்கப்பட்ட ஓர் ஆராய்ச்சி நூல்.

விலை அணு 0—10—0.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

(அச்சில்)

## ஸஹாபியர்களின் தியாகம்.

அம்மார், யாஸிர், பிலால், கப்பாப், முஸ்அப் (றலியல்லாஹு அன்ஹும்) போன்ற ஸஹாபியர்களது தியாகங்களை விளக்கும் நூல்.

## அன்னை ஆயிஷா.

அன்னை ஆயிஷா றலி அவர்களின் வாழ்க்கையை விளக்கும் அறிவுக் களஞ்சியம்! ஒவ்வொரு மாதர்களும் படித்துணர வேண்டிய நூல்.

கிடைக்குமிடங்கள் :-

மௌலவி B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி,
'ரஹ்மத் லாட்ஜ்'
127, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை.

●

V. K. MOHAMED IBRAHIM,
TOBACCO MERCHANT,
NETTU STREET, DINDIGUL.

●

தப்லீக் ஜமாஅத்,
பேகம்பூர், திண்டுக்கல்.

●

குர்ஆனிய்யா புக் டிப்போ,
தாசில்தார்பள்ளிவாசல் தெரு,
மதுரை.